# விமோசனம்

தொகுதி 1 | சுக்ல ௵ ஆவணி ௴ | பகுதி 1




ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா !

காந்தியின் ஒளியிடைக் குளித்தோம்—கள்ளின்
மாயத்தையறிந்துகண் விழித்தோம் !
தீர்ந்தது தரித்திரம் தொலைந்தது துயரம்
தீய கள் ளரக்கனை யடித்தோம் ! (ஜய)

[பாரதியாரின் இசை]

# மது விலக்கு ஏன்?

பாடுபட்டு வயிறு வளர்க்கும் ஜனங்களின் பொருளை நாச மாக்குவன கள்ளும், சாராயமும். தேகத்திற்குக் கள்ளு சாராயம் ஒரு நன்மையும் செய்யாது. மயக்கத்தை மருந்தென்றும், போதையைப் பரிகாரமென்றும், குடி வெறியைப் பலமென்றும் தைரியமென்றும் நினைப்பது அறியாமை. மதுபானத்தினால் சிரம பரிகாரம் அடையலாம் என்று எண்ணுவது கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பது போலாகும். மதுபானம் தேக பலத்தையும் புத்தியையும் கெடுத்துவிடும். அநேக வியாதி களையும் உண்டாக்கும். மருந்துகூடப் பிடிக்காமல் செய்யும். கொஞ்சமாகக் குடிக்க ஆரம்பித்தாலும் அது பிசாசைப்போல் பிடித்துக் கொள்ளும். பிறகு விட்டுவிட வேண்டுமென்ற அறிவு உண்டானாலுங் கூட, அந்த விஷமானது குடிப்பவனுடைய மன உறுதியையே கெடுத்து விடுவதால், விடுவதற்கு வேண்டிய உறுதி யில்லாமல் அவன் தடுமாறுவான்.

பாரத தேசத்தில் மக்கள் பின்பற்றும் எல்லா சமயங்களிலும் கள்ளும் அதனைச் சார்ந்த சாராயம் முதலிய மதுபான வர்க்கங் களும் நிஷேதமென்று தள்ளப்பட்டிருக்கின்றன. இவைகளை அருந்துகிறவர்கள் அநேகமாய்த் தங்கள் மக்கள் மனைவிமார்களுக் கும் இனத்தாருக்கும் தெரியாதபடி மறைவாகவே அருந்துவார் கள். குடிப்பதுண்டென்று தெரிந்தபோதிலுங்கூட அதைப்பற்றி வெட்கப்பட்டுத் தனியிடத்தில் குடிப்பார்கள்.

மற்ற தேசங்களுக்கும், பாரத தேசத்திற்கும் இதுவே வித்தி யாசம். நாகரிகத்தினாலும் கல்விப்பரப்பினாலும் பேர்பெற்ற மேல் நாட்டில், கள்ளையும் சாராயத்தையும் மற்ற உண்பண்டங்களுடன் வீடுகளிலேயே வைத்துக்கொண்டிருப்பார்கள்; மனைவி மக்கள் எதிரில் எல்லாரும் நாணமின்றிக் குடிப்பார்கள். அங்கே மது பானம் நிஷேதிக்கப்படவில்லை; மிதமிஞ்சிப்போவது தான் குற் றம். குடி வெறி யுண்டானாலொழிய, குடிப்பது மேல் நாட்டில் அநாகரிக மன்று.

நம்முடைய நாட்டைப்பற்றி சிலாகித்து மேலே சொல்லி யிருப்பது உண்மையாயினும், மதுபானக் கடைகளை யொழிக்க நாம் சீக்கிரம் கண் விழித்து முயற்சி யெடுக்காமற் போனால், இன் னும் சில காலத்திற்குள் இவ்வேறுபாடு இல்லாமலே போகும். நம்முடைய நாட்டிலும் சீக்கிரத்தில் மதுவர்க்கம் வீட்டினுள்

புகுந்துவிடும். அனைவருமறிய நாணமின்றிக் குடித்து உண்ணும் கௌரவமான பண்டங்களுள் ஒன்றாய்விடும். இப்போது பகிரங்கமாய் மேலோர் கீழோர் எனப்படுபவர் அனைவரும் சாப்பாட்டுக் கடைகளுக்குப் போய்த் தின்பண்டங்கள் புசிப்பது போலவே மதுபானக் கடைகளுக்குள்ளும் போய்ச் சாராய வர்க்கங்களை அருந்துவோம். கடைகளும் பெரிய மனிதர்கள் வருவதற்குத் தக்கவாறு சுத்தமாக்கப்பட்டு விளக்கு முதலியன வைத்து மனதைக் கவருமாறு அலங்கரிக்கப்படும். இப்படி நடக்குமென்பதற்குப் போதுமான அறிகுறிகள் இப்போதே பார்க்கலாம்.

மதுபான விஷயத்தில் பொது ஜனங்களுக்கும் மேலோருக்குமுள்ள அருவருப்புத் தேய்ந்து போகுமுன்னமே அதை ஒழித்தல் வேண்டும்.

மேல் நாட்டு பௌதிக ஆராய்ச்சிக்காரரும் சமூக சீர்திருத்தக்காரரும் மதுபானத்தின் கேட்டைச் சில காலமாய் நன்கு அறிந்துகொண்டு அதை ஒழிக்கப் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். அமெரிக்காவில் முற்றிலும் மதுவை யொழிக்கச் சட்டம் செய்துவிட்டனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள ஜனங்கள் ஆண் பெண் எல்லாரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். கூலி வேலை செய்பவருங்கூடப் புத்தகம் பத்திரிகை படிப்பார்கள். ஆகையால் எவ்விதப் பிரசாரமும் அந்த நாடுகளில் செய்வது எளிதாகும். நம்முடைய நாட்டில் கோடிக்கணக்கான மனிதர்கள் படிப்பு என்னும் வாசனை கூட இல்லாதவர்கள். இவர்களுள் குடிப்பழக்கம் வேரூன்றி விட்டால் பிறகு அவர்களுக்கு அறிவூட்டித் திருத்துவது அசாத்தியமாய் விடும். நம்முடைய ஜாதியே க்ஷீண மடைந்து நாசமாய்ப் போவோம்.

நம்முடைய நாட்டில் இப்போது அநேக சமூகங்கள் கள், சாராயம் தீண்டுவதே கிடையாது. ஆனாலும் கள்ளு சாராயத்திற்கு ஏழைகள் போடும் பணம் எவ்வளவு? இந்தியா முழுதும் வருஷம் ஒன்றுக்கு 70 கோடி ரூபாய். இதில் சர்க்கார் பங்கு 25 கோடி. சென்னை இராஜதானியில் மட்டும் வருஷம் ஒன்றுக்கு 20 கோடி ரூபாய். இதில் சர்க்கார் பங்கு 6 கோடி.

சென்னை இராஜதானியில் சர்க்காருக்கு நிலத்தில் வருமானம் 7 கோடி; கள்ளுவருமானம் 6 கோடி; பணக்காரர்கள் செலுத்தும் வருமானவரி 2 கோடிகூட இல்லை.

குடிக்காகப் போகும் பணம் தென்னாட்டில் மட்டும் நாள் ஒன்றுக்கு 5 லக்ஷம் ரூபாய். மதுபானக் கடைகள் தொலைந்தால் இவ்வளவு பொருளும் நாட்டுக்கு மிஞ்சும். கொலையும், களவும்,

மற்ற குற்றங்களும், ஒழுக்கங் கெட்டு நடப்பதும், வறுமைப் பிணியும், வியாதிகளும் பாதிக்குமேல் குறைந்துபோகும். எத்தொழிலும் விருத்தி யடையும். ஏழைகள் வீட்டில் காசு மிஞ்சும்; கடன்கள் தீரும். எல்லாருடைய வியாபாரமும் நன்றாக நடக்கும்.

இடறிவிழக் குழிகள் தோண்டி அவற்றினருகில் குழந்தைகளை விளையாட விடுவோமா? விட்டால் குழந்தைகள் கட்டாயம் குழியில் விழுந்து காலொடித்துக் கொள்ளுவார்கள். அவ்விதமே நாடு நகரங்களில் எங்கேயும் கள்ளும் சாராயமும் விற்கவும் வாங்கவும் வசதிகள் ஏற்படுத்திவிட்டுக் குடிக்க வேண்டாம் என்று ஜனங்களிடையில் சொல்வதில் பயனில்லை.

குடும்பங்களுக்குப் பெருநஷ்டம் உண்டாக்கி அதில் ஒரு பங்கை சர்க்கார் வருமானமாகச் செய்துகொள்வது அரசியல் முறையாகாது. நாட்டிற்கு நஷ்ட முண்டாக்கும் பொருளை முற்றிலும் தொலைப்பதே முறையாகும்.

சர்க்கார் ஆதரவில் நடந்துவரும் மதுபானக் கடைகள் மூடப்பட்டால், திருட்டுத்தனமாய்க் குடிப்பது நாளடைவில் நின்று போகும். பழைய குடியர்கள் கெட்டாலும் புதிய குடியர்கள் உண்டாக மாட்டார்கள்.

ஆகையால் பூரண மதுவிலக்குச் சட்டம் அமெரிக்காவில் போல் நம்முடைய நாட்டிலும் நிறைவேற வேண்டுமென்று விடா முயற்சியுடன் பெருங் கிளர்ச்சி செய்யவேண்டும்.

---

யுத்தங்கள், கொள்ளை நோய்கள், பஞ்சங்கள் இவை எல்லாவற்றினும் இங்கிலாந்துக்கு நேர்ந்திருக்கும் தீங்கைவிட அதிக தீமை கள்ளுசாராயக் கடைகளால் நேர்ந்திருக்கிறது.

—வில்லியம் கிளாட்ஸ்டன்

(இங்கிலாந்தின் பிரசித்திபெற்ற மந்திரி)

* * * *

கட்குடியைப் போன்ற கொடிய பாவம் நம்மிடையே வேறென்ன இருக்கிறது? மதுவகைகளின் இறக்குமதியையும், உபயோகத்தையும் அடியோடு தடுத்துவிட்டால் அதன் பின்னர் மக்கள் எல்லாரும் தேக சுகத்துடனும், மன மகிழ்ச்சியுடனும் வாழலாம் என்பது யாருக்குத்தான் தெரியாது?

—மில்டன் (ஆங்கில மகாகவி)

# சுக்குட்டிக்கு புத்தி வந்தது

இராம முதலி வீட்டுக்கும் அவன் மாமன் மகன் சுக்குட்டி என்கிற சுப்பிரமணிய முதலியின் வீட்டுக்கும் நடுவில் ஒரு சுவர் தான். ஒவ்வொரு நாளும் அந்தி நேரம் வெளிச்சமிருக்க, சுக்குட்டி வீட்டு வாசலில், அவன் சிநேகிதர்கள் பழனி முதலியும் சொக்க நாதனும் வருவார்கள்.

பழனி : அண்ணே !

சுக்குட்டி : ஓய் ! வந்து விட்டீர்களா ?

சொக்கநாதன் : ஆமாம், வா, போகலாம்.

சுக்குட்டி : இன்னும் ஒரு முழம் நெய்யலா மென்றிருக்கிறேன்.

பழனி : தினம் நீ இப்படித்தான் சொல்வாய், நெய்வது எப்போ துந்தா னிருக்கிறது. வா போகலாம்.

பிறகு சுக்குட்டி நெசவு வேலையை நிறுத்திவிட்டு வெளியே வருவான். எல்லாரும் சேர்ந்து போவார்கள்.



இதைஇராம முதலி தினமும் தன் தறியண்டை உட்கார்ந்தே கேட்பான். அவர்கள் தெருவு கடந்து போனதும் தன் மகள் வள்ளியைக் கூப்பிடுவான். "வள்ளி, உன் சொப்பைக் கொண்டுவா !" என்பான்.

வள்ளி தார் சுற்றிக் கொண்டிருப்பாள். அவள் எழுந்து உள்ளே போய்ப் பரணிலிருந்து ஒரு பழைய மண் செப்பைக் கொண்டு வந்து அவன் முன் வைப்பாள். அதன் மேல் ஒரு மஞ்சள் துணி கட்டியிருக்கும். அதை இராம முதலி மெதுவாய் அவிழ்த்து அதில் நான்கு அணு போடுவான்.

"சுக்குட்டி இன்னிக்கு நாலணு கள்ளுக்கடைக்காரனுக்குக் கொடுப்பான்" என்று சொல்லி மறுபடியும் செப்பைத் துணியால் மூடிக் கட்டி விட்டு எடுத்துக் கொண்டுபோய் வைக்கச் சொல்லுவான்.

மறுநாளும் இப்படியே. "போதும், வாடா போகலாம்" என்று வாசலில் பழனி முதலி சொல்வது கேட்கும்.

"வள்ளி !" என்பான் இராம முதலி. சுக்குட்டி வேலையை நிறுத்திவிட்டு வீதிக்குப் போவான். வள்ளி செப்பைக் கொண்டுவந்து



தன் தகப்பன் முன் வைப்பாள். மறுபடி நாலு அணு அதில் இராம முதலி போடுவான். பிறகு வள்ளி செப்பைக் கொண்டுபோய்ப் பரணில் வைத்து விடுவாள். சுக்குட்டி கள்ளுக்கடைக்குச் சென்று பணம் கொடுத்து இரண்டு சீசாகள் வாங்கிக் கண்ணை மூடிக் கொண்டு குடிப்பான்.

இப்படியே நாள் தவருமல் நடந்தது. இராம முதலி செப்பில் காசு நிறைந்துகொண்டே வந்தது. சுக்குட்டி சம்பாதிக்கும் காசு நாலு நாலு அணுவாய்க் கள்ளுக்கடைக்காரனுக்குப் போய்க்கொண்டே வந்தது. நாலு அணுவுக்குமேல் குடிக்கக் கையில் காசு இல்லையே என்று சுக்குட்டி வருத்தப்பட்டுக்கொண்டே யிருப்பான். வள்ளி தன் செப்பில் பணம் நிறைந்துகொண்டு வருவதைப் பார்த்து மகிழ்வாள்.

சுக்குட்டி வயிற்றில் தினமும் போன கள்ளு தன் வேலை செய்ய ஆரம்பித்தது. காலை எழுந்ததும் சுக்குட்டிக்குக் கொஞ்சம் தலைவலி. கண் விழி சிவந்து கொண்டு வந்தது. பேச்சு குடிகாரன் பேச்சாயிற்று. வீட்டில் மனைவியுடனும் தாயாருடனும் சண்டை. சந்தைச் செலவு என்ருல் எப்போதும் திண்டாட்டம்.

மாதம் பன்னிரண்டாயிற்று. ஒரு நாள் காலை சுக்குட்டியின் தாயார், கிழவி, வீட்டுக்கு முன்னுல் சாணிஜலம் போட்டுக் கொண்டிருந்தாள். வாசலில் இராம முதலி ஒரு மயிலைப் பசுமாட்டைப் பிடித்துக்கொண்டு எங்கிருந்தோ வந்தான். ஓர் இளங் கன்றுக்குட்டி பசு மாட்டின் மடியில் தலையை வைத்தும் ஓடிக் குதித்தும் விளையாடிக் கொண்டிருந்தது.



"ஏய்!" என்று உள்ளே இருந்த தன் மனைவியைக் கூப்பிட்டான்.

"யாருடையது பசுமாடு?" என்ருள் சுக்குட்டியின் தாயார்.

"நான் தான் நேற்று மேச்சேரியில் வாங்கினேன்" என்ருன் இராம முதலி.

"அப்படியா? உனக்கென்ன மகராஜனுக்கு? எங்களைத்தான் தரித்திரம் பிடுங்கித் தின்கிறது" என்ருள் கிழவி.

"என் அப்படிச் சொல்லுகிருய்?" என்று இராம முதலி சொல்லிவிட்டுத் தன் மனைவி கையில் மாட்டின் தும்பைக் கொடுத்தான்.

"நீ நெய்து கூலி சம்பாதிக்கிருய். என் மகனுக்கும் அதே கூலி தான் வருகிறது. ஆனுல் எல்லாம் எங்கேயோ பாழாய்ப் போகிறது

எப்போதும் திண்டாட்டமாய்த்தா னிருக்கிறது. மாடு நல்ல ஜாதி. என்ன கொடுத்தாய் அப்பனே?" என்றாள்.

"70 ரூபாய் கொடுத்தேனம்மா."

"எழுபது ரூபாய்! ஆமாம், இல்லாமல் கறவை மாடு வருமா?" என்றாள்.

"வள்ளியக்கா சொப்பில் சேர்ந்த காசுதான். இன்னும் 20 ரூபாய் இருக்கிறது. அதற்கு நாளை செவ்வாய்ச் சந்தையில் தவிடும் பருத்திக் கொட்டையும் வாங்கிப் போடலாமென் றிருக்கிறேன்!" என்றான்.

"வள்ளியக்கா சொப்பில் எப்படி இத்தனை பணம் சேர்ந்தது?" என்றாள் கிழவி.

"உன் மகன் தினமும் கள்ளுக்கடையில் போடுகிற காசைத்தான் நானும் தினம் வள்ளியக்கா சொப்பில் தவறாமல் போட்டு வந்தேன். அது சேர்ந்து இந்தக் கறவை மாடு வாங்கினேன்!" என்றான்.

இதோடு கதை முடியவில்லை. அதற்குமேல் ஆறுமாத மாயிற்று. சுக்குட்டி தாயார் என்ன சொன்னாலும் அவன் கள்ளுக்கடைக்குப் போவதை விடவில்லை. "நான் சம்பாதித்த காசுக்கு யார் என்ன சொல்வது?" என்று சண்டை போடுவான். கிழவியை அடிப்பதுமுண்டு. ஆறாவது மாதம் ஊரெல்லாம் ஒரு விஷ ஜுரம் வந்தது. இராம முதலிக்கும் வந்தது. பத்து நாள் படுக்கையில் கிடந்தான். சுக்கு மிளகு கஷாயம் தான் மருந்து. சொஸ்தமாயிற்று. மறுபடி தறியண்டை உட்கார்ந்தான். இராம முதலி படுக்கையிலிருக்கையிலேயே அடுத்த வீட்டில் சுக்குட்டிக்கும் ஜுரம் வந்தது. பத்து நாளாயிற்று; இருபது நாளாயிற்று. எழுந்திருக்க முடியவில்லை. வீட்டில் சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்ல முடியாது.



என்ன, கனகம்மா, உன் புருஷனுக்குப் பத்து நாளில் சொஸ்தமாயிற்று. என் மகனுக்கு ஏனோ இன்னும் ஜுரம் நிற்கவே யில்லையே" என்று சுக்குட்டியின் தாயார் வந்து இராம முதலி மனைவியுடன் சொல்வாள்.

"எல்லாம் தெய்வச் செயல்" என்பாள் அவள்.

"இந்த தெய்வம் எங்களை என்று கண் திறந்து பார்க்குமோ?" என்றாள் கிழவி.

"அப்படியில்லையம்மா" என்று இராம முதலி சொன்னான்.

“ வேறு என்ன ? எல்லாம் விதி தான் ” என்று கனகம்மா சொன்னாள்.

“ உனக்குத் தெரியாது. நேற்று சேலத்திலிருந்து பெரிய டாக்டர் வந்து எல்லாருக்கும் ஊசி குத்திவிட்டுப் போனாரே, அவர் கள் குடியாதவர்களுக்கு வியாதி சீக்கிரம் சொஸ்தமாகும் என்றும், குடிப்பவர்களுக்கு மருந்து பிடிப்பது கஷ்டம் என்றும் சொன்னார். கள்ளும் சாராயமும் உடம்பில் இரத்தத்தைக் கொன்று விடுகிறது என்று சொன்னார்.”

“ அஃதெல்லாம் வீண் வார்த்தை. விதிக்கு மேலெது ?” என்றாள் கனகம்மா.

ஒரு மாதம் எப்படியோ கழித்துத் தட்டுத் தடுமாறி சுக்குட்டி படுக்கையை விட்டு வெளியே வந்தான். வியாதி சொஸ்தமாயிற்று. ஆனால் வேலைசெய்ய முடியவில்லை.

இராம முதலி திண்ணையில் உட்கார்ந்து பல்தேய்த்துக் கொண்டிருந்தான். அவனிடம் சுக்குட்டி மெள்ளவந்து உட்கார்ந்தான்.

“ அத்தான் ! இந்தக் கள்ளை இனிமேல் நானும் விட்டு விடலாமென்றிருக்கிறேன் ” என்றான் சுக்குட்டி.

“ அதற்கு மேலானது ஒன்றுமில்லை ” என்றான் இராம முதலி.

“ இதோ இன்று கோயிலுக்குப்போய் சாமி முன் சத்தியம் செய்யப் போகிறேன். பிறகு நானும் சொப்பில் காசு போடப் போகிறேன். உனக்கு மாத்திரம் பசுமாடு என் ? என் வீட்டில் பாலுக்கும் மோருக்கும் செலவு இல்லையா ?” என்றான் சுக்குட்டி.

“ அப்படியே செய். நானும் கோயிலுக்கு வருகிறேன். இன்று அமாவாசை, சுவாமி கும்பிட்டு நானும் ஒரு தேங்காய் உடைக்கலாம் ” என்றான் இராம முதலி.



# கெண்டி வீரன் வெற்றி

"போடு ஒன்னரை டிராம்!" என்றான் கெண்டி வீரன். கடைக் காரன் சாராயம் வார்த்துக்கொண்டிருக்கையிலே "போடய்யா ஒன்னரை டிராம்! யார் என்ன பண்ணமுடியும், என்னை? பார்க்கலாம், இன்னிக்கு ஒரு கை! யாரோ கள்ளு சாராயம் குடிக்கக்கூடாது, கடையெல்லாம் மூடிப் போடவேண்டுமென்று பேச வந்திருக்கிறார்களாமே. கூட்டம் போடப்போகிறார்களாமே. விடுவேனா அவர்களை நான்! பார்த்தாயா?" என்று மடியிலிருந்து சாண் நீளம் ஒரு மடக்குக் கத்திலய எடுத்து விரித் துக் காட்டினான். "யாராவது நான் கடைக்குப் போவதைத் தடுத்தால் இதே கத்தியால் குத்திவிடுவேன்" என்றான்.

"நம் ராஜா வைத்திருக்கிற சாராயக்கடை இருக்க, போகவேண் டாம் என்று சொல்ல எவனுக்குண்டு பாத்தியம்? சர்க்கார் பாழாய்ப் போச்சா? கேட்பார் இல்லையா?" என்றான் மறுபடியும்.

"நீ கூட்டத்திற்குப் போகிறாயா?" என்று சாராயக்கடைக்காரன் கேட்டான். வீரன் பதில் சொல்லாமல் சாராயத்தைக் குடித்துவிட்டுப் பிறகு தொண்டையை உருமி சரிப்படுத்திக்கொண்டு "ஆ! போவேன், போகாமலென்ன? என்னை விடமாட்டார்களா?" என்றான்.

"ஏன் விடமாட்டார்கள்? எல்லாரும் வரலாமென்று தானே விளம் பரம் போட்டிருக்கிறார்கள். நீ முன்னதாகவே போய் பெஞ்சுமேல் உட் கார்ந்து கொள். யாராவது போ என்றால் போகமாட்டேன் என்று சொல்" என்றான் கடைக்காரன்.

"அதுதான் சரி!" என்று கெண்டி வீரன் மீசையை முறுக்கிக் கொண்டு சொன்னான்.

"போய் ஏன் குடிக்கக்கூடாது என்று கேள். அவர்கள் காப்பி குடிக்கிறதில்லையா கேள்" என்றான் கடைக்காரன்.

"ஓ! அப்படித்தான் கேட்பேன். எனக்கு பதில் சொல்லிவிட்டுத் தான் பேசவேண்டும்."

மறுபடியும் கடைக்காரன் "அவர்கள் மோட்டார் வண்டி, ரயில் வண்டி ஏறவில்லையா கேள். இதெல்லாம் பார்ப்பார்களுடைய மோசம் தான்" என்றான்.

"எல்லாம் கேட்பேன். இன்னொரு அரை டிராம் போடு. இந்த நாளிலே சாராயத்திற்குக்கூடத் தண்ணி வார்த்து மோசம் செய்கிறார்கள்.

எல்லாம் மோசம். முன் ஒன்றரை டிராம் குடித்தவன் இப்போது இரண்டு டிராம் போடவேண்டியிருக்கிறது. கூட்டம் போட வருகிருராமே, அவர் யார்? எந்த ஊர்? அவருக்கு என்ன வேலை?"

"அவருக்கு என்ன வேலை! பேசுகிறதுதான் வேலை" என்ருன் கடைக்காரன்.

"ரொம்ப கெட்டிக்காரரோ?" என்று கேட்டான்.

"ஆமாம்! உன்னை ஏமாற்றிவிடுவார்." என்ருன் கடைக்காரன்.

"என்னை ஏமாற்றுவதா? அதெல்லாம் பொய், பார்க்கலாம் ஒரு கை."

இரண்டு டிராமும் உள்ளே போட்டுவிட்டு, கெண்டி வீரன் போய்க் கூட்டத்தின் முன்னணியில், பெரிய மனிதர்களுக்கென்று போடப்பட்டிருந்த பெஞ்சியின்மேல் உட்கார்ந்துகொண்டான். யாரோ அவனை எழுந்திரு என்ருர்கள். அவன் அசையவுமில்லை, பேசவுமில்லை. எல்லாரும் சிரித்தார்கள்.

சபை ஆரம்பித்தது. எல்லாரும் கை தட்டும்போது வீரனும் கை தட்டினுன். அவன் பக்கத்திலுள்ளவர்கள் இவனிடம் சாராய வாசனையைக்கண்டு ஒதுங்கி உட்கார்ந்தார்கள். பிரசங்கம் செய்கிறவர் மெதுவாகப் பேசினுர்.

"இவர் என்ன, சாதாரணமாய் நம்ம பேச்சுத்தான் பேசுகிருர். இவர் அல்ல போல் இருக்கிறது. பார்க்கலாம், குடிக்கிறவர்களைத் திட்டுவதற்கு ஆரம்பித்தபோது பார்த்துக்கொள்ளலாம்" என்று வீரன் தனக்குள் எண்ணிக்கொண்டு மடியிலிருந்த கத்தியைத் தடவிக்கொண்டே அவர் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். வீரன் மனதில், தான் சிறுவனுக இருந்தபோது எப்படி இருந்தானே அதையெல்லாம் எவ்வாருே தெரிந்துகொண்டு இவர் பேசுகிருர் என்று தோன்றிற்று. பிறகு அவர் சொன்னதெல்லாம் இவனுக்குத் தன் மனைவியுடன் சந்தோஷமாயிருந்த வாழ்வை எடுத்துச் சொல்வது போலிருந்தது.

"இவர் என்ன என்னைப்பற்றியே பேசுகிருர் போலிருக்கிறதே!" என்று எண்ணினுன் வீரன்.

பிறகு தன் வாழ்வு கெட்டுப்போனதெல்லாம் ஒன்றென்ருய்ச் சொல்ல வாரம்பித்தார் போலிருந்தது. வீரன் மடியிலிருந்த கத்தியை விட்டுவிட்டுக் கண்ணைத் துடைத்துக்கொள்ள வாரம்பித்தான். பேசுகிறவர் சொல்லுகிற கதையெல்லாம் சரியாய்த் தன் கதையாகவே இருந்தது. அவ்வப்போது கூட்டத்தில் எல்லாரும் "கொல்" என்று சிரிப்பார்கள். வீரன் கண்களிலோ நீர் ததும்பிற்று.

தடுக்கமுடியாமல் திடீரென்று "சாமி!" என்று கத்திக்கொண்டு எழுந்தான்.

பேசுகிறவர் பேச்சை நிறுத்தி இவனைப்பார்த்து "என்ன தம்பி ?" என்றார்.

"சாமி, நீ சொல்லுகிறதெல்லாம் உண்மை. உன்னைக் குத்திவிடத் தான் நான் இன்று இங்கே வந்தேன். ஆனால் இப்போது நீ சொன்ன தெல்லாம் நியாயம். நான் எண்ணின எண்ணம் தப்பு. அந்தப் பொல் லாத சாராயக்கடையையும் கள்ளுக்கடையையும் மூடிவிட்டால் தான் நாம் பிழைப்போம். இது உண்மை. சுவாமி, நீ என் கடவுள். நீ என் குரு. நீ என்னை மன்னிக்கவேண்டும். காப்பாற்றவேண்டும்" என்று காலில் விழுந்து கும்பிட்டான்.

"அப்பனே! எழுந்திரு. நீ இந்த விஷத்தை இனித் தொடாம லிருக்க ஒப்புக்கொள்" என்றார்.

"சுவாமி! என் மனைவி இறந்துபோனாள். ஆறு வருஷமாயிற்று. நீ முன்னே சொன்னாயே, அப்படியே அவள் வயிற்றில் குழந்தை இருக்க உதைத்து நான் அவளைச் சாகடித்தேன். இது யாருக்கும் தெரியாது. மறுநாள் எடுத்துப்போய்ப் புதைத்துவிட்டோம். இப்போது ஆறு வருஷ மாயிற்று. நான் ஒரு கொலைபாவி" என்று மறுபடியும் அவர் காலில் விழுந்து அழுதான். அவனை எடுத்துத் தழுவி "அப்பனே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். நீ இனிமேல் குடிப்பதே இல்லை யென்று சத்தியம் செய்து சுவாமிபேரில் பாரம் போட்டுவிடு" என்றார்.

"குடியால் மனம் தளர்ந்து போனவர்கள் நிலைமை இப்படித்தான். நல்லதிலும் பொல்லாததிலும் மனம் போனதே போக்கு. தடுத்துக் கொள்ள முடியாது. அவசரப் படுவார்கள். இப்போது நல்ல எண்ணம் வந்திருக்கிறது. அவனுக்கு மன உறுதி அளித்து, மறுபடி பழைய வழி யில் போகாமல் காப்பாற்றுமாறு கூட்டத்தில் உள்ளோர் எல்லாரும் ராம நாமம் பஜியுங்கள்" என்று மறுபடியும் அவர் சொல்ல, எல்லாரும் "ராம் ராம் சீதாராம்!" என்று ஒரே தொனியாய்ப் பாடினார்கள். வீரனும் கூடப் பாடினான்.

சாராயக் கடைக்காரன் வீரனுக்காக எதிர்பார்த்த வண்ணமா யிருந்தான்.

# அரசியல் முறை

சென்னை அரசாங்கத்தின் விளம்பர இலாகா வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின் சாராம்சம் வருமாறு :

"நமது தேசத்து ஏழை ஜனங்கள் சாராயமும், கள்ளும் குடிக்கிறார்கள். சாராயத்தில் 100 க்கு 50 பங்கும், கள்ளில் 100க்கு 8பங்கும் மதுசாரம் உண்டு.

மதுசாரம் உடலிலுள்ள தசை, நரம்பு முதலியவைகளுக்கு விஷமாகும். உடலின் தசைக்கு ஜீவ சக்தியை ஊட்டுவது பிராணவாயு. மதுசாரம் அந்தப் பிராணவாயுவை அபகரித்துக்கொண்டு ஜீவசக்தியைக் கெடுத்து விடுகிறது.

மதுசாரம் உணவன்று. ஒரு பொருளை உணவு என்று சொல்வதற்கு அது பின்வரும் மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வகையில் உபயோகப் படவேண்டும்:—(1) வேலை செய்வதினால் உடம்பில் தேய்ந்துபோன தசையை அது இட்டு நிரப்பவேண்டும். (2) உடனே வேண்டியிராமலிருந்தாலும் கொழுப்பாக மாறிக் கல்லீரலிலோ, தசை நாரிலோ தங்கி வேண்டும்போது உபயோகப்படத் தயாரான கையிருப்பு சக்தியாக வேண்டும். (3) உடம்பில் உஷ்ணம் குறையாமலிருக்க உதவி செய்யவேண்டும்.

மதுசாரம் மேற்கூறிய மூன்று வகையிலெதிலும் உபயோகப்படுவதில்லை. அதில் போஷிப்பு சக்தி சிறிதும் கிடையாது. குடித்தவுடன் உடம்பில் உஷ்ணம் உண்டாவதுபோல் காணப்படும். ஆனால் அது பொய்த் தோற்றம். உண்மையில் மது உஷ்ணத்தைக் குறைத்து விடுகிறது. குளிர் மிகுதியுள்ள மலையுச்சிகளில் ஏறுவோருக்கு மதுசாரம் கொடுத்து ஆராய்ச்சிக்காரர்கள் சோதனை செய்து பார்த்தார்கள். அச்சோதனையில், மதுசாரத்தினால் உடம்பின் உஷ்ணம் குறைகிறதென்றும், பலவீனம் உண்டாகிறதென்றும் ஐயமறத் தெரியவந்தன.

குடித்தவனுக்கு முதலில் உற்சாகமும் மனக்கிளர்ச்சியும் தோன்றும். இதன் காரணம் என்னவென்றால், குடித்தவனுடைய மூளை வலிமையிழந்து உடம்பின் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மனோசக்தி குறைந்துவிடுவதேயாகும். இதனால் அவன் அமைதியா யிருக்க வேண்டிய காலத்தில் சிரித்தும், பாடியும், சத்தம் போட்டுப் பேசியும்

ஆரவாரம் செய்கிறான். காரணமில்லாமல் கோபங் கொள்கிறான். பின்னர், குடிகாரன் இந்திரியங்களை அடக்கிச்செலுத்தும் சக்தியை யிழந்து விடுகிறான். அவன் உடம்பு தள்ளாடுகிறது. அவனுடைய நடவடிக்கைகள் எல்லாம் தடுமாற்ற முறுகின்றன. நாற்காலியிலிருந்து எழுந்திருக்கும் போது அவன் அதைக் கீழே தள்ளிவிடுவான்; அல்லது மேஜையின்மீது கோப்பையைத் தொப்பென்று போட்டு உடைப்பான். இன்னும் அதிகம் குடித்தால் கடைசியாகக் குடிகாரனின் அறிவு அடியோடு மழுங்கி விடுகிறது. மயக்கமாய் விழுகிறான், வாயில் வந்ததைப் பிதற்றுகிறான், கண்கள் இரத்தம்போல் சிவந்துவிடுகின்றன, மூச்சுவிடும்போது பலமான சத்தம் கேட்கிறது. இவையெல்லாம் மதுசாரத்திலடங்கிய விஷம் நரம்பு ஸ்தானங்களைப் பாதித்து அவற்றைச் செயலறச் செய்வதின் பயனாகும்.

குடிப்பழக்கம் தேகசுகத்தைக் கெடுத்துப் பலவகை நோய்களுக்கு மூலகாரணமாகிறது. உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளும் தம் தம் வேலையைச் சரிவரச் செய்யும்போது உடம்பு பூரண சுகத்துடன் இருக்கிறது. அவ்வுறுப்புகளில் ஒன்றோ, பலவோ பாதிக்கப்பட்டுத் தம் வேலை செய்யத் தவறும்போது நோய்கள் உண்டாகின்றன. உடம்பில் மிகவும் நுட்பமான உறுப்புத் தொகுதி மூளையும் நரம்புகளுமேயாகும். மதுசாரம் விரைவில் இரத்தத்துடன் கலந்து ஆரம்பத்திலேயே மூளையைக் கெடுத்துவிடுகிறது. நரம்புகளின் வேலையைத் தடைசெய்து விடுகிறது. குடிப்பழக்கம் அதிகமாக ஆக, ஜீரணக் கருவிகளும், பித்தாசயமும், இரத்த ஓட்டமும் பாதிக்கப்படுகின்றன.

மதுசாரத்தின் கொடுமை உடனே தெரியவராது; ஆனால் நாளடைவில் தெரியவரும். பைத்தியக்கார வைத்தியசாலைகளில் வந்து சேருவோரில் 100-க்கு 25 பேருக்குமேல் குடியினால் மூளை கெட்டவர்களேயாவர்.

மதுசாரம் குடிகாரனின் ஜீவ சக்தியைக் குறைத்து விடுகிறது. இதனால் அவனுடைய சந்ததிகளுங்கூடப் பலவீனர்களாவார்கள். நோய்க் கிருமிகளை எதிர்ப்பதற்கு வேண்டிய சக்தி அவர்களுடைய இரத்தத்தில் இருப்பதில்லை. இவ்வாறு நாளடைவில் ஜாதியே க்ஷீணிக்கத் தொடங்கி விடுகிறது.

மதுசாரம் கொள்ளை நோயைவிடக் கொடியதாகும். கொள்ளை நோய் நாட்டின் சில ஜனங்களைப் பெருவாரியாகக் கொள்ளை கொண்டுபோகிறது. ஆனால் மதுசாரமோ ஜாதியையே பலவீனப்படுத்தி எல்லாவகை நோய்களுக்கும் எளிதில் இரையாகும் நிலைமையை உண்டுபண்ணுகிறது."

மதுசாரத்தினால் உண்டாகும் பெருந் தீங்குகளை இவ்வளவு தெளிவாக விளம்பரப் படுத்தியிருக்கும் அரசாங்கத்தார் கடைகளை மூடமாட்டோமென்கிறார்கள். மதுபானக் கடைகளை மூடிவிட்டு, நாட்டுக்கு நஷ்டமுண்டாக்கக் கூடிய விஷ பதார்த்தத்தை யாரும் செய்யவுங் கூடாது, விற்கவுங் கூடாதென்று சட்டம் செய்து, திருட்டுத்தனமாய் யாராவது உண்டாக்கி விற்றால் அவர்களைப் பிடித்துத் தண்டிக்கப் பார்ப்பதல்லவோ அரசியல் முறை?

---

## சம்பள பட்டுவாடா தினம்



தொழிலாளி சம்பளம் வாங்கிக்கொண்டு வரும் வழியில் குடித்து விட்டுத் தரையில் கிடக்கிறான். குடும்பச் செலவுக்குப் பணம் கொண்டு வருவான் என்று எதிர்பார்த்த அவன் பெண்சாதியும் குழந்தைகளும் இந்த அலங்கோலத்தைப் பார்க்கிறார்கள்.

# ரயில்வேலையில் குடி ஆகாது

அமெரிக்காவில் 1919ம் வருஷத்தில் பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதற்கு முன்னமேயே ரயில்வே கம்பெனிகளில் பின்வரும் விதி அமுலில் இருந்து வந்தது :

"ரயில்வே ஊழியர்கள் வேலை செய்யுங் காலங்களில் எந்த வித போதைப் பொருள்களையும் உபயோகித்தல் கூடாது. இந்த விதியை மீறி அவற்றை யாரேனும் உபயோகித்தாலும், அவை விற்கப்படும் இடங்களுக்கு அடிக்கடி போய்வந்தாலும், அவர்களை வேலையிலிருந்து தள்ளுவதற்கு அதுவே போதிய காரணமாகும்."

இந்த விதி எதற்காகவென்று ரயில் முதலாளி ஒருவரைக் கேட்டபோது அவர், "ரயிலில் அபாயங்களைத் தடுப்பதற்காக ஒரு கோடி ரூபாய் செலவு செய்து கட்டிய அபாய அறிவிப்புகள், ஒரு டிராம் சாராயத்தின் சக்தியினால் பயனற்ற வீண் செலவாக முடியும்" என்று பதிலளித்தார். ரயில்வே தொழிலாளி ஒருவன் மிகச் சொற்ப அளவு சாராயம் அருந்துபவனாயினும், அவனால் சொத்துக்கும், உயிருக்கும் பெருத்த நஷ்ட முண்டாகக் கூடுமென்பது ரயில்வே நிர்வாக அநுபவத்தில் திட்டமாகத் தெரியவந்திருக்கும் விஷயமாகும்.

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் செய்யப்படுவதற்கு முன்பு, ஒரு பெரிய ரயில் விபத்து பின்வருமாறு நேரிட்டது. என்ஜின் ஓட்டி ஒருவன் முதல் நாளிரவு குடித்திருந்தான். ரயில் புறப்பட்டபோது அவன் போதை தெளிந்திருந்தான். பார்த்தால் குடித்தவனாகக் காணப்படவில்லை. ஆயினும் வழியில் ஓரிடத்தில் அபாய அறிவிப்புக் குறியை அவனால் பார்க்க முடியவில்லை. முதல் நாள் குடியே இதற்குக் காரணமாகும்.

ஹியூகோ ஷ்வெல்ஸ் என்னும் பௌதிகப்புலவர் இது சம்பந்தமாகப் பல பரிசோதனைகள் நடத்தினர். அரைப்புட்டி பீர் குடித்தபின்னர் சிகப்பு, பச்சை வர்ணங்களுக்குள் பற்பல தரங்களின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கும் சக்தி குறைந்து போவதாக அச்சோதனைகளில் தெரியவந்தது. அதிலும் மதுசாரத்தால் பாதிக்கப்பட்டவனுக்குப் பச்சை வர்ணத்தைவிட, அபாய அறிவிப்பாகிய சிகப்பு நிறத்தைக் கண்டுபிடிப்பதில் அதிக கஷ்டம் ஏற்

பட்டது. [பீரில் 100 க்கு 4 பங்கு மதுசாரம் உண்டு. கள்ளில் 100 க்கு 8 பங்கும், சாராயத்தில் 100 க்கு 50 பங்கும் மது சாரமாகும்.]

அரைப் பைண்ட் புட்டி பீரில் ஒரு சிறு கரண்டி மது சாரந்தான் அடங்கி யிருக்கும். இதைச் சாப்பிடச் செய்து, பின்னர் ஒரே ஒரு கண நேரம் பச்சை, சிகப்புக் கொடிகள் காட்டி அவற்றைக் கண்டு பிடிக்கிறார்களா வென்று சோதனை செய்யப்பட்டது. நூறு பேரை இவ்வாறு சோதித்ததில், 44 பேரின் பார்வை சக்தி குறைந்திருந்தது. பதினெட்டு பேருக்கு இந்தப் பார்வைக்குறைவு மிகவும் அதிகமாயிருந்தது. இதிலிருந்து சொற்ப அளவு மதுசாரமுங்கூடப் பலருடைய பார்வையைக் கெடுத்து விடுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. என்ஜின் ஓட்டிகள், மோட்டார் ஓட்டிகள் முதலியோர் விஷயத்தில் இது பெரிதும் அபாயத்துக்கிடமாகலாம். இவர்கள் புகையிலும், மழையிலும், பனியிலும் அபாயக் குறிகளின் வர்ணங்களை நொடி நேரத்தில் கண்டறிந்து வண்டி ஓட்டவேண்டியவர்கள். பார்வை சிறிது மழுங்கினாலும் அபாயம் ஏற்படலாம். சோதிக்கப்பட்ட 100 பேருக்கும் பார்வை குறையவில்லையே, 18 பேருக்குத்தானே குறைந்தது என்றாலும், மேற்படி பதினெட்டு பேரினால் எவ்வளவோ பெரிய விபத்துகள் உண்டாகக் கூடுமல்லவா?

குடியை யொழிப்பதின் நன்மைகளை ரயில்வே ஊழியர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ரயில்வே ஊழியர்கள் மட்டும் அடங்கிய பூரண மதுவிலக்குச் சங்கங்கள் அநேக மிருக்கின்றன. அமெரிக்காவில் ரயில்வே என்ஜின் டிரைவர்களின் சங்கம் ஒன்றிருக்கிறது. இச்சங்கத்தின் முக்கியமான விதிகளில் ஒன்று, அங்கத்தினர்கள் எப்பொழுதும் மதுவைத் தொடக்கூடாதென்பது. இத்தகைய விதி தொழிலாளர்களே செய்து கொண்டதின் காரணத்தை மேற்படி சங்கத்தின் தலைவர் வாரன் ஸ்டோன் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்:

"அதிவேகமாக ரயில்கள் ஓடும் இக்காலத்தில், என்ஜின் ஓட்டுவோர் எப்பொழுதும் தங்கள் மூளையைத் தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும். குடியினால் மூளையைக் குழப்பிக்கொள்ளல் அபாயத்துக் கிடமாகலாம். துரிதமான ரயில் வண்டிகளில் என்ஜின் ஓட்டுவோன் சராசரி ஒரு நிமிஷத்துக்கு மூன்று தடவை அங்கங்கே காட்டப்படும் அபாயக்குறிகளைப்பார்த்து அவற்றின் கருத்தைச் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டியதா யிருக்கிறது. வண்டி பத்திரமாகப் போய்ச் சேருவதும், அடியோடு நாசமடைவதும் அவனையே பொறுத்தவையாகும். சிலசமயம் இமைப்பொழுது மூளை வேலை செய்யாவிட்டால் வண்டி கவிழ்ந்து விட

லாம். சாராயம் மூளையை மழுக்கித் தாமதமாய்ச் செய்துவிடுகிறது. இக்காரணத்தினல் மேற்படி விதியை மீறி நடப்பவர்கள் எல்லாரையும் எங்கள் சங்கத்திலிருந்து தள்ளி விடுகிருேம். 1918-ம் வருஷத்தில் என்ஜின் ஓட்டிகளின் சர்வதேசீய மகாநாடு ஒன்று நடைபெற்றது. 902 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அம்மகாநாட்டில் மது வியாபாரத்தை அடியோடு தொலைத்துப் பூரண மதுவிலக்குச் சட்டம் செய்யவேண்டு மென்னும் தீர்மானம் ஒரு மனமாக நிறை வேற்றப்பட்டது."

---

## ஒரு விடு கதை



இப்படத்தில் ஒன்று கள்ளுக் குத்தகைதாரன் குடும்பம்; ஒன்று கள்ளுக் குடிக்கிறவன் குடும்பம். எது அது, எது இது என்று காட்ட முடியுமா?

# கலால் வருமானம்

## ஒரு நாடகம்

---

### பாத்திரங்கள்

ஒரு கொழுத்த செட்டி [சென்னை சர்க்கார்], ஒரு போலீஸ் சேவகன், பாங்கி நடத்தும் முதலாளி, குடியானவன், கடுதாசி விற்கிறவன், பாரஸ்டு இலாகா சேவகன், கள்ளுக்கடைக்காரன், சட்டசபை அங்கத்தினர் முதலியவர்கள்.

சூத்திரதாரன் :—பாரத நன்னாட்டில் இப்போது எங்கே பார்த்தாலும் சர்க்கார் கள்ளு, சாராயக் கடைகள் வைத்திருக்கிறார்கள். போதாதற்கு கஞ்சா, அபினிக் கடைகளுமுண்டு. இதில் ஏழைகள் கொட்டும் பணம் வருஷம் ஒன்றுக்கு 70 கோடி ரூபாய்க்கு மேலாகும். ஆஹா! இந்தப்பொருளை வேறு நல்வழியில் செலவழித்தால் நாட்டில் எவ்வளவு இன்பமும் செல்வமும் நிறைந்திருக்கும்? நாள் ஒன்றுக்கு 20 லக்ஷம் ரூபாய் கொடுத்துத் துன்பமும், வியாதியும், பல துயரங்களும் விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறோம். மனைவி மக்களைப் பசியில் வருந்த விட்டுப் பணம் கொடுத்து மதியிழப்பது தவிரக் கள்ளு சாராயத்தால் என்ன நலம்? இந்த விஷ வலையில் அகப்பட்டுத் துன்பப்படும் ஏழைகளைத் தப்புவிக்க அக்கடைகளைத் தொலைக்க வேண்டும். ஆனால் கடைகளில் வரும் லாபத்தில் சர்க்காருக்கு ஒரு பெரிய பங்கு. கடை மூடு என்றால், சர்க்கார் முடியாது என்கிறார்கள். நம்முடைய சென்னை இராஜதானியில் சர்க்காருக்கு மொத்த வருமானம் வருஷம் ஒன்றுக்கு 18 கோடி. இதில் நிலவரி 8 கோடியானால், கள்ளு வருமானம் 6 கோடி! முன்னாட்களில் நம்முடைய நாட்டை யாண்ட மன்னர்கள், உழுது பயிர் செய்த பூமியிலிருந்து பங்கு வாங்கி அரசாங்கம் நடத்தினார்கள். இந்நாளில் நமது அரசாங்கத்தின் செலவுக்காகக் குடி கெடுக்கும் கள்ளையும் சாராயத்தையும் ஜனங்களுக்கு வார்த்து அதனால் மனைவி மக்கள் இழந்த பொருளில் ஒரு பங்கை எதிர்பார்க்கிறார்கள்!

[செட்டியும் அவன் பின்னால் துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரனும் வருகிறார்கள்]

செட்டி :—நமஸ்காரம், பெரியோர்களே! நான் நடத்தும் தருமங்களுக்கு நீங்கள் பணம் உதவவேண்டும். 'அறஞ்செய விரும்பு' என்று

ஔவையார் சொன்ன சொல்லை மக்கள் மறக்கலாகாது. நான் வெகு கஷ்டப்பட்டுப் பல கோயில்கள், பல சத்திரங்கள், வைத்தியசாலைகள், கல்விச் சாலைகள் நடத்தி வருகிறேன். அவரவர்கள் சக்திக்குத் தக்க வாறு பொது தருமத்திற்கு உதவவேண்டும், நண்பர்களே!

எல்லாரும் :—சரி சரி, போ! போ!

சட்டசபை யங்கத்தினர் :—ஐயா செட்டியாரே, தாங்கள் சொல்லு வது சரி, ஆனால் காலம் சரியில்லை. மழைமாரி காலாகாலத்தில் பெய்ய வில்லை. உங்களுக்குத் தெரியாதா? நாட்டில் விளைவு, வியாபாரம் சரியா யில்லை. கைத் தொழில்களோ நசித்துப் போயின. கிராமங்களில் ஏழை கள் சொல்லொணாத வறுமையில் தவிக்கிறார்கள். அந்நிய நாட்டுத் துணி வந்து இராட்டைகள் அழிந்தன. தறிகளும் அழிந்துபோய்க் கொண்டு வருகின்றன. குடியானவர்கள் கடன் பட்டுத் தப்பும் வழி தெரியாமல் திகைக்கிறார்கள். இது தருமங் கேட்கும் சமயமன்று, தயவு செய்து போய் வாருங்கள், பிந்தி பார்க்கலாம்.

செட்டி.—ஐயா, பெரியவரே, தாங்கள் பேச்சை நிறுத்துங்கள். நல்ல வார்த்தையாகக் கேட்டேன். இல்லை யென்றால் இதோ படித்துப் பாருங்கள்.

[ஒரு கடுதாசி கொடுக்கிறான். பின்னால் நிற்கும் போலீஸ் சேவ கனைப் பார்த்துக் கண் சிமிட்டுகிறான்.]

சட்ட.சபை யங்கத்தினர் :—இதென்ன? ஓஹோ! ஜப்தி வாரண்டு. கையெழுத்து எங்கே? ஓ அப்படியா?

[வணங்கி நமஸ்காரம் செய்கிறான்.]

நண்பர்களே! இது விடாதுபோலிருக்கிறது. ஏதோ கொடுத்துத் தான் அனுப்பவேண்டும் போலிருக்கிறது.

செட்டி :—வாரும்; குடியானவரே! [கீழே துணி விரிக்கிறான்.]

[குடியானவன் தோளின் மேல் ஒரு கலப்பையுடன் வருகிறான். கலப்பையைக் கீழே வைத்து, வீட்டுக்குள்போய்த் திரும்பி வந்து ஐந்து பணப்பைகள் 1 முதல் 5 வரை எண்ணிப்போடு கிறான்.]

செட்டி :—போதவே போதாது! நீதான் எல்லா தருமமும் செய்ய வேண்டிய வேளாளன். நீயே இப்படிச் செய்தாயானால் மழை எப்படிப் பெய்யும்? போதாது! போதாது!

[குடியானவன் மறுபடி வீட்டுக்குள் போய் ஐந்து பணப்பைகள் கொண்டுவந்து 6 முதல் 10 வரை எண்ணிப்போடுகிறான்.]

செட்டி :—இப்படிச் செய்தால் நான் என்ன பண்ணமுடியும் ? குடியானவரே, நான் சொன்னபடி கேளுங்கள். குறைந்தது 30 பையாவது தங்களிடமிருந்து வரவேண்டும்.

குடியானவன் :—ஐயோ ! நான் செத்தேன். அடுத்த வருஷம் மழை இல்லாமல் போனல் நான் என்ன செய்வது ? ஊரை விட்டு ஓடித்தான் போகவேண்டும்.

பாங்கி முதலாளி :—குடியானவரே, கேளும். இவரிடம் இப்படி வியாபாரம் செய்தால் கேட்கமாட்டார். அடுத்த வருஷம் என் மழையில்லாமல் போகும் ? அப்படிக் கஷ்டம் வந்தால் நான் இருக்கிறேன். 30 பை கேட்கிறார். சரி, 20 கொடுத்துவிடும். கோபித்துக் கொள்ளுவார் போலிருக்கிறது. பின்னல் சேவகனிடம் துப்பாக்கியு மிருக்கிறது.

குடியானவன் :—ஆண்டவனே கதி !

[வீட்டுக்குள் போய்த் திரும்பிவந்து 10 முதல் 20 வரை எண்ணிப் பணப்பைகள் போடுகிறான்.]

ஐயா, மறுபடி கேட்காதீர்கள்.

செட்டி :—இல்லை, இல்லை. அடுத்த வருஷம் வரை நான் உங்களைத் தொந்திரவு செய்ய மாட்டேன். ஐயா, பத்திரக்காரரே ! ஒருவரையொருவர் இக்காலத்தில் நம்ப முடியாது. எழுதிக் கொடுத்தால்தான் ஏதோ உண்டு. பத்திரங்கள் சரியாய் எழுதி வருகிறார்களா ? ரிஜிஸ்டர் செய்து கொள்கிறார்களா ? என்ன உம்முடைய வருமானம் ? தாரும், எல்லாம் என் முத்திரைக் காகிதம் தானே !

ஸ்டாம்பு வெண்டர் (சின்னப் பெட்டிக்கு எதிரில் உட்கார்ந்து புள்ளிபோட்டு):—செட்டியாரே ! இதோ எட்டுப் பைகள்.

[எண்ணிப் போடுகிறார்.]

செட்டி :—சரி, சுமாரார்ய்த்தா னிருக்கிறது. அடுத்த வருஷம் கொஞ்சம் இன்னம் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். [பாரஸ்டுகாரரைப் பார்த்து] தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? காடுகளெல்லாம் எங்களுடையவைதானே ? என்ன் வருமானம் ?

பாரஸ்டுகாரன் :—ஐயா, குடியானவர்கள் காடு தங்களுடையது என்கிறார்கள். நீ தண்ணீர் வார்த்து வளர்த்தாயா என்கிறார்கள். ஏதோ கூடுமானவரை மிரட்டி உருட்டிப் பார்த்து வருகிறேன். என் பிழைப்பும் பார்த்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. இதோ ! [ஒரு பை போட்டு, சரியாய் நிறையாத மற்றொரு பை போடுகிறான்.]

செட்டி :—இதென்ன ஏமாற்றுகிறீர் ? ஒரு பை தொள தொளவென்றிருக்கிறது.

பாரஸ்டுகாரன் :—அப்படித்தான். இருந்தது அவ்வளவே.

செட்டி :—சரி. ஐயா, கள்ளுக் கடைக்காரரே! உங்கள் கதை என்ன?

கள்ளுக்கடைக்காரன் :—என்னைப்பற்றித் தங்களுக்கு என்ன கவலை? இவர்கள் தான் தருமத்துக்குத் தரமாட்டேன் என்கிறார்கள். மழையில்லை மாரியில்லை என்று சாக்குச் சொல்லுகிறார்கள். கடவுள் இருக்க நாமேன் பயப்படவேண்டும்? இந்தாருங்கள்!

[15 பைகள் தாராளமாய் எண்ணி வீசிப் போடுகிறான்.]

செட்டி :—பலே! நீதான் நல்ல குடி. இப்படி யல்லவோ கொடுக்க வேண்டும்? அண்ணே! உன்னை ஊரைவிட்டு ஒட்டுவார்கள் போலிருக்கிறதே.

கள்ளுக்கடைக்காரன் :—ஐயோ! அப்படி என்னை அம்பலத்தில் விடாதீர்கள். நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள் இருக்க என்னை யார் என்ன செய்யமுடியும்?

செட்டி (மெள்ள) :—பயப்படாதே! உன் வேலையை நீ பார். நானும் ஜனங்களுடன் கூடப்பாடுவேன். கள் குடிக்கக்கூடாது, கூடாது என்று. அதனால் என்ன? உன் காரியத்தை நீ கவனித்துக்கொள்.

பாங்கிக்காரர் (செட்டி கள்ளுக்கடைக்காரனிடம் மெள்ளச் சொன்னதைக் கேட்டுக்கொண்டு):—அதுதான் சரி. அப்படித்தான் கள்ளை ஒரே நாளில் ஒழிக்க முடியுமா? மெள்ள மெள்ளத்தான் ஏதோ செய்யலாம். நீ பயப்பட வேண்டியதில்லை.

செட்டி :—ஐயா, சாஹுகாரரே! என்ன போகப் பார்க்கிறீர்? உம்முடைய பங்கு எங்கே?

பாங்கிக்காரர் :—நான் என்ன பிச்சைக்காரன். இவர்கள் கொடுத்த தெல்லாம் என் காசுதான். நான் வேறே கொடுக்கவேண்டுமா?

செட்டி :—கொண்டுவாரும், கொண்டுவாரும். இப்படி யெல்லாம் ஏமாற்ற முடியாது.

பாங்கிக்காரன் :—இந்தாரும்!

[மடியிலிருந்து பணம் எடுத்து இரண்டு கை நிறைய வைத்துக் கொண்டு எல்லாருக்கும் தெரியுமாறு போடுகிறான்.]

செட்டி :—என்ன அவர்கள் பை, பையாகக் கொடுக்கிறது. நீர் வெகு ஆடம்பரமாகக் கையைத்திறந்து போடுகிறீர். இது என்னபிச்சை!

பாங்கிக்காரன் :—போதும் போங்கள். உங்கள் பெரிய முதலாளிக்கும் நான்தானே தரவேண்டும்? பிந்தி பார்த்துக்கொள்ளலாம்.

[சாஹுகாரன் நமஸ்காரம் செய்துவிட்டுப் போலீஸ்காரனுக்குத் தனியாய் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, எல்லாரையும் அழைத்துச் செல்லுகிறான்.]

# புத்தஜாதகக் கதை

மகான் புத்தரின் பூர்வ ஜன்ம வரலாறுகளடங்கிய புத்தஜாதக புராணத்தில் கள்குடத்தைப்பற்றி ஒரு கதையுண்டு.

போதைதரும் குடிவகைகளை அருந்துதல் மிகவும் தவருன காரியம். அதனல் பல தீமைகள் விளையும். உத்தமர்கள் இதை மனதிற் கொண்டு, தாங்கள் மதுபானம் செய்யாதிருப்பதுடன், அயலார்களையும் அப்பாவத்தில் புகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இது பின்வரும் கதையினுல் போதிக்கப்படும்.

போதி சத்துவர் ஒருசமயம் தேவர்களுக்கு அரசனுகி, இந்திர பதவியை வகித்திருந்தார். அவர் தமது அபார கருணையினல் உள்ளத்தைத் தூய்மை செய்துகொண்டவராய், ஜீவகோடிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்னும் உறுதி கொண்டிருந்தார். தயாளம், அடக்கம் முதலிய நற்குணங்கள் அவரிடம் பொலிந்தன. இந்திர பதவிக்குரிய இன்பங்களையெல்லாம் அவர் அநுபவித்தபோதிலும் உலகத்துக்கு நன்மை புரிய வேண்டுமென்னும் அருள் அவர் மனதைவிட்டகலவில்லை.

சாதாரணமாய், பணத்தின் மயக்கத்திலுலேயே மக்கள் தங்கள் சொந்த நலத்தைக்கூட மறந்து விடுகிருர்கள். போதிசத்துவரோ, தேவேந்திர பதவிக்குரிய சுகபோகங்களில் ஈடுபட்டிருந்தும் ஜீவகோடிகளின் நன்மையை மறந்தாரில்லை.

ஒருநாள் அப்பரமாத்மா மனிதர்கள் வாழும் உலகத்தின்மீது கண்ணேட்டம் செலுத்தினர். அப்பொழுது ஸர்வமித்திரன் என்னும் அரசன்மீது அவர் பார்வை விழுந்தது. இவ் வரசன் தீயநண்பர்களின் கூட்டுறவு காரணமாகக் கள்ளருந்தும் பழக்கம் பெற்றிருந்தான். அவனைப் பார்த்து அவன் குடிகளும் குடிப்பழக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். கட்குடித்தல் பெரும்பாவம் என்பதை அஞ்ஞானத்தினல் அவ்வரசன் உணரவில்லை யென்று கண்ட போதிசத்துவர், “அந்தோ! இந்த ஜனங்களுக்கு இவ்வளவு பெரிய துன்பம் நேர்ந்ததே” என்றெண்ணி இரங்கினர்.

“பார்வைக் கழகாயிருக்கும் தவருன பாதையைப்போல், ஆரம்பத்தில் இனிமை பயக்கும் மதுபானம் மக்களை மோட்சம் அடைய முடியாமல் தடுத்துவிடுகிறது. ஆதலின், இப்போது இந்த ஜனங்களைக் காப்பாற்ற நான் செய்யவேண்டியதென்ன?

“தங்களுக்குள் முதன்மையா யிருப்பவனைப் பின்பற்றுதல் மனிதர்களின் இயல்பு. ஆதலின் இந்த அரசனை இத்தீய வழக்கத்திலிருந்து

விடுவிப்பதே நான் செய்யவேண்டியது. இவனிடமிருந்தே ஜனங்களுக்கு நன்மையும் தீமையும் உண்டாகின்றன."

இவ்வாறு தீர்மானித்து, பரமாத்மா ஒரு பிராமணனின் உருவங் கொண்டார். அவர் திருமேனி பத்தரை மாற்றுப் பொன்னைப்போல் ஒளிவீசியது. தலைமயிரை ஜடையாகத் திரித்துக் கட்டிக்கொண்டார். மரவுரியும், மான்தோலும் உடம்பில் தரித்தார். இத்தகைய கம்பீரமான தோற்றத்துடன், கள் குடமொன்றைத் தன் இடப்புறத்தில் தொங்க விட்டுக்கொண்டு, அவர் சர்வமித்திரனுடைய சபைக்கு வந்து மேலே அந்தரமாக நின்றார். அப்போது சர்வமித்திரனும், அவன் தோழர்களும் மது வகைகளைக் குடித்துவிட்டு, குடிகாரர்களுக்குரிய பேச்சு பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆகாயத்தில் தோன்றிய பரமாத்மாவைக் கண்டதும் அவர்கள் ஆச்சரியமடைந்து, எழுந்துநின்று, பயபக்தியுடன் கைகுவித்து நின்றார்கள். அப்போது பகவான் இடிமுழக்கம் போன்ற குரலில் கூறியதாவது :—

" இதோ இந்தக் குடத்தைப் பாருங்கள். கழுத்துவரை இது நிரம்பியிருக்கிறது. மலர்களும் பசுமையான இளந்தளிர்களும் இதன் கழுத்தைச் சுற்றி நகை செய்து விளையாடுகின்றன. அற்புதமான குடம். இதை யார் என்னிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொள்ளப் போகிறார்கள்?"

இதைக் கேட்டு மிகவும் வியப்புற்ற அரசன் பயபக்தியுடன் கை கூப்பிநின்று " பால சூரியனைப்போன்ற ஜோதியுடன் தாங்கள் விளங்குகிறீர்கள். பூரண சந்திரனின் தண்ணொளியெனத் தங்கள் கருணை போலிகின்றது. பார்வைக்கு மகரிஷிபோல் தோற்ற மளிக்கிறீர்கள். தங்கள் பெயர் என்ன ? அருள் கூர்ந்து தெரிவியுங்கள் " என்றான்.

போதிசத்துவர் :—"நான் யாரென்பதைப் பின்னால் தெரிந்துகொள்வீர்கள். இப்போது இந்தக்குடத்தை என்னிடமிருந்து வாங்கிக் கொள்வதுபற்றிச் சிந்தியுங்கள். இவ்வுலகிலும், மறு உலகிலும் நேரிடக்கூடிய மகத்தான துன்பங்களுக்கெல்லாம் துணிந்தவர்கள் இதை வாங்கிக்கொள்ளுங்கள் " என்றார்.

சர்வமித்திரன் :—" இந்தவிதமாக ஒரு பண்டத்தை விலை கூறியவர்களை நான் இதுவரையில் கண்டதில்லை. சாதாரணமாய், ஒரு பொருளை விற்பவர்கள் அதன் குறைகளை மறைத்து அதன் பெருமைகளை மட்டும் பறையடிப்பதே வழக்கம். ஓ ! மகாத்மாவே ! அந்த ஜாடியில் இருப்பதென்னவென்று எங்களுக்குத் தெரிவியுங்கள். அதற்கு விலையாகத் தாங்கள் எங்களிடமிருந்து எதிர்பார்க்கும் பொருள் யாது ?"

போதிசத்துவர் :—" அரசனே ! கேட்பாயாக ! இந்த ஜாடியிலிருப்பது மழை நீரன்று ; புண்ணிய நதியிலிருந்து கொண்டு வந்த தீர்த்த

மன்று; மலர்களிலிருந்து சேகரித்த இனிய தேனன்று; உயரிய நெய்யன்று; வெள்ளிய சந்திர கிரணங்களை யொத்த பாலுமன்று. இந்த ஜாடியிலிருப்பது கொடிய கள். இதன் பெருமையை நன்ருகக் கேள்.

"இதைக்குடிப்பவன் போதை யடைந்து தன்னை மறப்பான்; சமதரையிலும் அவன் இடறி விழுவான்; நல்லுணவுக்கும் தீய உணவுக்கும் அவன் வேற்றுமை காணுன்; கிடைத்ததையெல்லாம் சாப்பிடுவான். இந்தக் குடத்திலிருக்கும் பானம் இவ்வளவு மகிமை வாய்ந்தது; இதை யார் வாங்கப் போகிறீர்கள்?

"இந்த மது உங்கள் உணர்வை யழித்துவிடும். இதன் போதையின் கீழ் நீங்கள் அறிவற்ற மிருகத்தைப்போல் நடந்துகொள்வீர்கள். உங்களைப்பார்த்துச் சிரிக்கும்படியான கஷ்டம் உங்கள் பகைவர்களுக்கு ஏற்படும். பெரிய சபையின் நடுவே நீங்கள் வெட்கமின்றிக் கூத்தாடலாம். இத்தகைய இந்தக் குடத்தை உடனே வாங்கிக்கொள்ளுங்கள்.

"இயற்கையில் சங்கோசமுள்ளவர்களும் இதைக் குடித்து வெட்கமற்றவர்களாவார்கள். துணி உடுத்தவேண்டிய தொல்லை அவர்களுக்கில்லாமல் போய்விடும். அவர்கள் ஜனக்கூட்டம் நிறைந்த இடங்களில் ஆடையின்றித் திரிவார்கள்.

"இன்னும் கேளுங்கள். இதைக் குடித்தவர்கள் சாலைகளில் விழுந்து உணர்வற்றுத் தூங்குவார்கள். தாங்கள் ஓக்காளித்த எச்சிலின் மீது புரள்வார்கள். நாய்கள் அவர்கள் வாயை நக்கி அவ்வுணவைத் தின்னும். இவ்வளவு மகிமை வாய்ந்த பானம் இதில் அடங்கியிருக்கிறது.

"ஒரு ஸ்திரீ இதைக் குடித்தாளாயின் அவள் தன் சொந்தத் தாய் தந்தையரை மரத்தில் கட்டியடிக்கும் நிலையையடைவாள். தன் கணவனையும் அவள் புறக்கணிப்பாள். யாதவர்கள் இந்தப் பானத்தை அருந்தித்தான் தாங்கள் உறவினர்கள் என்பதையும் மறந்து ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு செத்தார்கள். எவ்வளவோ பெரிய பதவியிலிருந்த செல்வக்குடும்பங்கள் எல்லாம் இதனுல் அழிந்து போயிருக்கின்றன.

"இந்த மதுவினுல் தேவர்கள் தங்கள் பதவியை யிழந்து சமுத்திரத்தில் மூழ்கி இறந்தார்கள். இந்தக் குடத்திலுள்ள பேய்தான் பொய்யை மெய்போலப் பேசும்படி செய்யும்; நற்கருமங்களென எண்ணித் தீச்செயல்கள் புரிந்து மகிழச்செய்யும்.

"இது பித்துண்டாக்கும் மருந்து; துன்பங்களுக்கு உறைவிடம்; விபத்துகளின் மூலவேர்; பாவங்களின் தாயார்; அறிவை மூடும் பயங்கர இருள். இதைக் குடித்தவன் குற்றமற்ற தன் தாய் தந்தையரையும்,

துறவறம் பூண்ட பெரியோர்களையுங்கூட அடித்துத் துன்புறுத்துவான். ஓ! அரசனே! இத்தகைய இந்த மதுவை வாங்கிக்கொள்.

"இதைக்குடித்துப் பழகினவர்கள் தீய ஒழுக்கம் பெறுவார்கள்; மிருகத்தன்மை யடைவார்கள்; சவம் போலாவார்கள்; நரகத்தில் விழுவார்கள். இதைக்குடித்து முழுதும் மதியிழவாத போதிலும் நல்லொழுக்கம் கெடும், அறிவு குன்றும், நாசத்திற்குக் காரணமாகும்".

இம்மொழிகளைக் கேட்ட அரசன் மதுபானம்செய்வதின் பாவத்தை நன்குணர்ந்தான். அதுமுதல் அவன் கள்ளுக்குடிப்பதை விட்டான். குடியாசையை அறவே தொலைத்தான்.

---

# துன்மார்க்கத்திற்கு வரி

1743-ம் வருஷத்தில் ஹவுஸ்-அப் லார்ட்ஸ் என்னும் இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையில் அரசாங்க வருவாய் சம்பந்தமாக ஒரு விவாதம் நடந்தது. அப்போது லார்ட் செஸ்டர்பீல்டு என்பவர் பேசியதாவது:

"பிரபுக்களே! சுகபோகத்துக்கு வரி விதிக்கவேண்டும்; துன்மார்க்கம் கூடாதென்று சட்டம் செய்யவேண்டும். இது தான் முறை. சட்டத்தை அமுல் நடத்துவதிலுள்ள கஷ்டங்களுக்காக இதைக் கைவிடல் சரியன்று. பாவத்துக்கு வரி விதிப்பீர்களா? ஏசு நாதரின் பத்து சன்மார்க்கக் கட்டளைகளை மீறி நடப்போர்மீது வரி போட்டு வருவாய் தேடுவோமா? அத்தகைய வரி அபகீர்த்தி வாய்ந்த தாகாதா? வரிகொடுக்கச் சக்தியுள்ளவர்க ளெல்லாம் தாராளமாய்ப் பாவம் செய்யலாமென்று சொல்வது போலாகாதா? பிரபுக்களே; துன்மார்க்கம், வரிபோட்டு வசூலிப்பதற்குரிய உடைமையன்று. அதை அடியோடு அழித்துவிடவேண்டியது. சுகபோகங்கள் அளவுக்கு மீறிப்போனல் தீமை விளையும்; எனவே அவற்றிற்கு வரிபோட்டுத் தடை செய்தல் நியாயம். ஆனல் தங்கள் இயல்பிலேயே தீமையானவைகளை அடியோடு ஒழிக்கவே வேண்டும். எந்த நாட்டிலாவது திருட்டுக்கும், விபசாரத்துக்கும் வரிபோட்டு வசூலித்ததாக நாம் கேள்விப்பட்டதே யில்லை. ஏனென்றால், ஒரு காரியத்துக்கு வரிபோட்டோமாயின், வரி கொடுக்கத் தயாராயுள்ளவர்கள்

அதைத் தாராளமாகச் செய்யலாமென்று அநுமதி கொடுப்பதேயாகும். குடி வெறியோ எந்த விடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் தீமை யுள்ளது ; ஆதலின் அது தண்டிப்பதற்குரிய குற்றம். அதற்கு வரிபோட்டு வசூலித்தல் தகாது.

"எனக்கு முன் பேசிய பிரபு, சாராயங் காய்ச்சுவதை எவ்வளவோ ஜனங்கள் ஒரு தொழிலாகக்கொண்டு பிழைத்து வருகிறார்களென்றும், அவர்கள் மிகுந்த கைத்திறமை பெற்றிருக்கிறார்களென்றும், ஆதலின் அத்தொழிலுக்கு எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென்றும் கூறினர். பிரபுக்களே ! இந்த வாதம் எனக்கு அளவில்லா ஆச்சரியத்தைத் தருகிறது. இந்தத் தொழிலாளிகள் உற்பத்தி செய்யும் பொருள் எத்தகையது ? அது கைகால்களை மெலியச் செய்கிறது ; குணத்தையும் குலத்தையும் கெடுக்கிறது ; மதியை மழுங்கச் செய்கிறது. இத்தகைய பொருளை உற்பத்தி செய்வோர் அநேகர் உளர் என்பது அதற்காதரவான ஒரு காரணமாகுமா ? திருடர்கள் பெருந்தொகையினராயிருக்கிறார்கள் என்ற காரணத்தின்மேல், திருட்டுச் சட்டத்தை ரத்து செய்ததாக யாரேனும் கேள்விப்பட்டதுண்டா ? உண்மையில், தேசமக்களின் சன்மார்க்க வாழ்வைக் கெடுக்கும் முயற்சியில் தலைப்பட்டவர்கள் இவ்வளவு அதிகபேர் இருக்கும்பட்சத்தில் நாம் செய்யவேண்டிய தென்ன ? வெள்ளம் தலைக்கு மேல் போவதற்கு முன்னால் இந்த க்ஷணமே தலையிட்டு அவர்களுடைய நாச வேலையை நிறுத்தவல்லவா வேண்டும் ? பிரபுக்களே ! சாராயங் காய்ச்சுவோரின் அதிசயமான கைத் திறமையைப்பற்றி அபாரமாய்ச் சொல்லப்படுகிறது. நாவுக்கு ருசியான விஷம் தயாரிக்கும் கைத்திறமை எவ்வளவு அதிசயமானதாயினும், அது மக்கட் குலத்துக்கு நன்மை பயப்பதன்று என நான் கருதுகிறேன். கொலைஞன் ஒருவன் வெகுநாள் பழக்கத்தினால் தன் கொலைத்தொழிலில் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தானாயின், அதன்பொருட்டு அவனை மன்னித்துவிட வேண்டுமென்று சொல்ல யாரேனும் முன் வருவார்களா ? பிரபுக்களே ! உண்மையில், இவர்கள் தயாரிக்கும் சாராயம் அவ்வளவு இனியதாயின், ஜனங்கள் ஏமாந்து அதைக்குடித்து அழிந்துபோகாவண்ணம் அச்சாராயப் பீப்பாய்களை உடைத்தெறிவோமாக. மனித வதை செய்வதில் அதிசயக் கைத்திறமை பெற்ற இத்தொழிலாளிகள் ; நாட்டிலே நோயும் துன்பமும் மலிவதற்குக் காரணமானவர்கள் ; தப்பிக்க முடியாத வகையில் ஜனங்களை மயக்கி இழுத்து விபசாரம் என்னும் படு குழியில் வீழ்த்துபவர்கள் ; இவர்களுடைய கைத்திறமையையும் தொழிலையும் இந்த க்ஷணமே நசுக்கி அழித்துப்போட்டு ஜனங்களை மீட்போமாக."

பதுத்தறிவில்லாத மிருகங்கள் வேண்டாத கள்ளை
மனிதன் பணம் கொடுத்து வாங்கிக் குடித்துக் கெட்டுப்போகிறன்.



# நான் ஒருவன் என்ன செய்யலாம்?

மதுவிலக்குக்கு ஆதரவு தருவோர்களுடைய உறுதிமொழியும் கையெழுத்தும் பெறப் புத்தகங்கள் அச்சிட்டுத் தமிழ்நாடு முழுவதும் நண்பர்கள் வசம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் புஸ்தகம் ஒன்றில் 500 கையெழுத்துகள் வாங்கலாம். அடியில் கண்ட உறுதிமொழி தமிழிலும், ஆங்கிலத்திலும், ஹிந்துஸ்தானியிலும் ஒவ்வொருபக்கத்திலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

"நம்முடைய நாட்டில் தருமமும் பொருளும் இன்பமும் வளர்ந்து அனைவரும் க்ஷேமமாயும் சுகமாயும் வாழ, கள்ளு, சாராயம், அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை முற்றிலும் ஒழிக்கும் சட்டங்களை உடனே செய்வது அவசியமென்றும், அவ்வித சட்டங்களைச் செய்வதற்கு நான் ஆதரவாயிருப்பேனென்றும், இந்தியா சட்டசபை, சென்னைச் சட்டசபை, கிராம, நகர, தாலூகா, ஜில்லா சபைகள் இந்தத் தேர்தல்களில் பூரண மதுவிலக்குக்கு ஆதரவாக உறுதிமொழிக் கையெழுத்திடாத எவருக்கும் நான் வாக்குக் கொடுப்பதில்லை என்றும் உறுதி கூறுகிறேன்."

மது பானத்தினின்று நாட்டை விடுவிப்பதே இந்தக் கிளர்ச்சியின் நோக்கமாகையால் விவரத்தைத் தெளிவாகச் சொல்லி, ஆண் பெண் இரு பாலாரிடமும், எல்லா ஜாதியாரிடம், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களிடம் கையெழுத்தும், தெரியாதவர்களிடம் கைநாட்டும் வாங்கவேண்டும். இம்மாதிரி மிக்க நல்லமுறையில் இதுவரை சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா நடுவலூர் செல்லமுத்து படையாச்சியவர்கள் 149 கையெழுத்தும், நாமக்கல் தாலூகா பொன்னேரி ரெ. வயிரமுதலியாரவர்கள் 500 கையெழுத்தும், பொத்தனூர் அ. ரங்காசாரியார் அவர்கள் 1000 கையெழுத்தும் வாங்கிப் புத்தகங்களைத் திருப்பியனுப்பி யிருக்கிறார்கள். இவர்களுடைய தொண்டு மிகவும் மெச்சத்தக்கது.

"நான் குடிக்கிறேனா அல்லது என் மக்கள் சுற்றத்தார் குடிக்கிறார்களா? மற்றவர்களைப்பற்றி நான் என்ன செய்யக்கூடும்? குடி என்பது மிகவும் கெடுதலானதுதான். வறுமைக்கும், பிணிக்கும், பஞ்சமா பாதகங்களுக்கும் காரணம் தான். இது ஒழிந்தால் நாட்டில் துக்கம் குறையும் என்பது உண்மைதான். ஆனால் நான் ஒருவன் என்ன செய்யலாம்?" என்று அநேகர் எண்ணிச் சும்மா இருக்கிறார்கள்.

நன்றாக ஆராய்ந்து பார்த்தால் நாம் ஒவ்வொருவரும், ஏழைகளும் பணக்காரர்களும், கற்றோரும் கல்லாதவரும், தொழிலாளர்களும் முத

லாளிகளும், நாட்டுவாசிகளும் நகரவாசிகளும், எந்த மதத்தாரும், சகல குலத்தாரும் அவரவர்கள் இருக்கும் இடங்களிலேயே இந்தக் குடிப் பேயைத் துரத்தும்போரில் சேர்ந்து உதவிசெய்யலாமென்பது விளங்கும். ஊக்கமும் ஜீவகாருண்யமும் கொண்டவர்கள் மனிதர் வருந்துவதைப் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்கமாட்டார்கள்.

வடஇந்தியாவில் துவாரஹாட்டு என்னும் ஊரில் ஹென்றி ஆர் வில் ஸன் என்னும் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் இருந்தார். அவர் அங்கே ஒரு மதுவிலக்குச் சங்கம் ஸ்தாபித்து அதற்குக் காரியதரிசியாக வேலை செய்துவந்தார். பிறகு அவர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டார். சங்கம் செத்துப்போய்விட்டது. ஆனால் வில்ஸன் தமது கடமையை விட்டு விடவில்லை. புதிதாக வேலையிலமர்ந்த ஊரிலும் அங்குள்ள தேசாபி மானிகளை உடனே நாடி அவர்களைக்கொண்டு ஒரு மதுவிலக்குச் சங்கம் ஏற்படுத்தினர். சங்கத்தின் காரியங்களை நடத்துவதற்கு தனிகர்களிட மிருந்து கொஞ்சம் பொருளுதவியும் சம்பாதித்துக் கூட்டங்கள் கூட்டி வருகிறார். அவர் கிறிஸ்துவப் பாதிரியாயினும் காங்கிரஸ் மகா சபை யாரால் நியமிக்கப்பட்ட மதுவிலக்குப்போர் கமிட்டியாருடன் கலந்து கொண்டு வேலைசெய்யத் தயாராயிருக்கிறார். உறுதிமொழிப் புத்தகங் களைத் தருவித்துக்கொண்டு கையெழுத்து வாங்க ஏற்பாடு செய்திருக் கிறார். இத்தகைய விடாமுயற்சியுடன் பலர் குடியை யொழிக்கும் போரில் சேர்ந்து தொண்டு புரிவார்களானால் இந்த அநீதியை அரசாங்கத் தார் வெகுநாள் நடத்திக்கொண்டே யிருக்கமுடியாது. ஏழைகள் விடுதலை யடைவார்கள்.

---

அமெரிக்க அரசாங்கத்தார் மதுவிலக்குச் சட்டம் செய்த தால் இழந்த கள்ளு வருமானம் குறைந்தது 190 கோடி ரூபாய். இதைப்பற்றி அவர்கள் பேசியதே கிடையாது. முதலில் இழந்த வருமானத்திற்குப் பல மடங்கு அதிக வருமானம் இப்போது அடைந்து வருகிறார்கள்.

*    *    *    *

அரசாங்கத்தார் செய்யப் போவதாகப் பயமுறுத்தும் பிர சாரத்தைப்பற்றிக் கள்ளுக்கடைக்காரர்கள் சிறிதும் திகிலடைய வில்லை. சந்திரகிரி தாலுகாவிலுள்ள கடைகளை இவ்வருஷம் முன் வருஷத்தைவிட ரூ. 10,000 சேர்த்து ஏலத்தி லெடுத்தார்கள். சேலம் தாலுகாவில் 43 கடைகளை, முன்வருஷத்தை விட ரூ. 71,749 அதிக குத்தகைக்கு ஏலத்தில் எடுத்தார்கள். சர்க் காரின் பேச்சில் கள்ளுக் கடைக்காரர்களுடைய மதிப்பே இவ்வா றானல் பொது ஜனங்களுடைய மதிப்பு என்ன வென்று கேட்க வேண்டியதில்லை.

# கடற்கரைக் கிளிஞ்சல்

தெளிவினின்று கள்ளு உண்டாகும்; இது கடைக்காரனுக்குத் தெரியும். கள்ளினின்று கண்ணீர் உண்டாகும்; இது குடிக்கிறவனுக்குத் தெரியும்.

*          *          *          *

கள்ளுக்கடைகளுக்குப் போய் மிஞ்சியதுதான் மற்றக் கடைகளுக்குப் போகும். மற்ற வியாபாரம் பெருக வேண்டுமானால் கள்ளை யொழியுங்கள்.

*          *          *          *

கள்ளுக்கடை சாராயக்கடையினால் விளையும் பயனைப்பார்க்க வேண்டுமானால், போலீஸ் கச்சேரிக்கும் செஷன் கோர்ட்டுக்கும் போய்ப் பார்கலாம்.

*          *          *          *

பெருங்குடிகாரன் ஒவ்வொருவனும் ஆரம்பிக்கும்போது மிதமாய்த்தான் குடித்தான்.

*          *          *          *

என்ன தடுத்தாலும் கொலையும் களவும் நிற்பதில்லை. அதற்காக ஏலம் விட்டுச் சிலபேருக்குக் கொலையும் களவும் செய்ய லைஸென்சு கொடுக்கமுடியுமா?

*          *          *          *

கள்ளுக்கடையை எடுத்து விடலாமா கூடாதா என்று குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களைக் கேட்டுப்பார்.

*          *          *          *

குடியினால் இரண்டு விதத்திலும் நஷ்டம். சம்பாதிப்பதும் குறையும்; வந்த பணமும் வீணாய்ப்போகும்.

*          *          *          *

எப்போதாவது குடிப்பேன் என்கிறவன் முடிவில் எப்போதும் குடிப்பவனாவான்.

*          *          *          *

குடித்தால் பலம் என்று எண்ணாதே. செக்கு இழுக்கும் மாடும், வண்டி பாரம் இழுத்துக்கொண்டு ஓடும் குதிரையும் தண்ணீர்தான் குடிக்கும். குடித்தால் தைரியம் என்று எண்ணாதே. காட்டு யானையும், புலியும், சிம்மமும் கூடத் தண்ணீர்தான் குடிக்கும்.

கைக் கடிகாரத்தின் நுட்பமான இயந்திர அமைப்பில் கொஞ்சம் மணலைப் போட்டால் என்ன தீமை விளையுமோ, அவ்வளவு தீமை மிதமான குடியினால் மூளைக்கு உண்டாகிறது.

—லூதர் பர்பாங்க்

*   *   *   *

உலகில் நிகழ்த்தப்படும் எல்லாக் குற்றங்களினாலும் எவ்வளவு ஜனங்கள் அழிகிறார்கள், குடியினால் மட்டும் எவ்வளவு பேர் அழிகிறார்கள் என்று கணக்குப் பார்த்தால், குடியினால் அழிவோரின் தொகையே அதிகமாயிருக்கும்.

—லார்ட் பேகன் (ஆங்கில நாட்டுத் தத்துவ ஞானி)

*   *   *   *

கள்ளு விற்றல் என்பதே கேடான காரியம். அப்படியானால் சொற்ப வருமானத்தை முன்னிட்டு அரசாங்கத்தார் மது வியாபாரியுடன் கூட்டுச் சேர்வதைக் குறித்து என்னவென்று சொல்வது? ஈவாளும் ஜூடாஸும் செய்த பேரத்தைவிட இது மோசமானதாகும்.

—ஹொரேஸ் கிரீலீ.

(ஈவாள் சைத்தானுடன் பேரம் செய்து ஒரு பழத்திற்காக உன்னத தெய்வப் பதவியை இழந்தாள். ஜூடாஸ் சொற்ப லஞ்சத்திற்காக ஏசுநாதரைக் காட்டிக்கொடுத்து அழியாத அபகீர்த்தி பெற்றான்.)

*   *   *   *

அமெரிக்காவில் மது விலக்குச் சட்டம் செய்யப்பட்ட பின்னர், என்னுடைய மோட்டார் தொழிற்சாலை எவ்வளவோ அபிவிருத்தி யடைந்திருக்கிறது. அதன் பயனாக என்னுடைய தொழிலாளரும் நிச்சயமான நன்மை யடைந்திருக்கிறார்கள்.

—ஹென்ரி போர்டு

(உலகப் பிரசித்திபெற்ற மோட்டார் வியாபாரி)

*   *   *   *

அமெரிக்காவின் பற்பல மாகாணங்களையும் சேர்ந்த பிரமுகர்கள் 1919-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17உ பின்வரும் அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள் :—

வாஷிங்டன் மகாணத்தில் மூன்று வருஷமாய் மது விலக்கு அமுலிலிருந்து வருவதின் பயனாக, தொழில் துறையிலும், சன்மார்க்கத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் திருப்திகரமான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிறைக் கூடங்களில் குற்றவாளிகளின் தொகை குறைந்திருக்கிறது. பாங்கிகளில் ஜனங்களின் பணம் அதிகமாகி யிருக்கிறது. தொழில்கள் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. தொடர்ச்சியாக மூன்று தேர்தலில் வாக்

காளர் மிகப் பெரும்பான்மை வாக்குகளினால் மதுவிலக்கை ஆத ரித்திருக்கிறார்கள்.

—ஹார்ட்

(வாஷிங்டன் ராஜதானி கவர்னர்)

*  *  *  *

ஆறுமாத மதுவிலக்கின் பயனாகச் சிறைக்கூடங்களில் உள்ள கைதிகளின் தொகை பாதியாகக் குறைந்துவிட்டது. மூன்றில் ஒருபங்கு சிறைகள் அடியோடு காலியாகிவிட்டன. சமூக வாழ்வு நிலை உயர்ந்திருக்கிறது. பிச்சை கேட்பது குறைவாகி யிருக் கிறது. தொழிற்சாலைகளில் முன்னைவிட நன்றாய் வேலை நடப்ப பதாகவும் தொழிலாளிகள் நல்ல நிலைமையிலிருப்பதாகவும் முத லாளிகள் தெரிவிக்கிறார்கள்.

—ஜேம்ஸ் குட்ரிச்

(இண்டியானா ராஜதானி கவர்னர்.)

*  *  *  *

மது விலக்குச் சட்டத்தினால் கெண்டக்கி இராஜதானியில் 100க்கு 50 வீதம் குற்றங்கள் குறைந்துவிட்டன. பல சிறைச் சாலைகளும், ஏழை விடுதிகளும் காலியாகிவிட்டன. தொழில் முயற்சிகளுக்கு அபார நன்மை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே மது விலக்கை எதிர்த்த தொழிற்சாலை முதலாளிகள் பலர் இப் பொழுது அதைப் பலமாக ஆதரிக்கிறார்கள்.

—ஹாமில்டன் (ரிவினியூ கலெக்டர்.)

*  *  *  *

கொலராடோ மாகாணம் பூரண மதுவிலக்கில் அளவற்ற உற்சாகம் கொண்டிருக்கிறது. சட்டம் அமுலுக்கு வந்ததும் அதி சீக்கிரத்தில் ஜனங்களின் வாழ்வுநிலைமை உயர்ந்து விட்டது.

—ஆலிவர் ஷூப்

(கொலராடோ மாகாண கவர்னர்.)

*  *  *  *

டென்வரில் மது விலக்கின் பயனாகக் குற்றங்கள் 100க்கு 50 வீதம் குறைந்து விட்டன.

—ஹாமில்டன் ஆர்ம்ஸ்டிராங்

(போலீஸ் தலைவர்.)

*  *  *  *

கொலம்பியாவில் மதுவிலக்கின் பயனாகப் போலீஸ் படையை 100 க்கு 25 வீதம் குறைத்துவிட்டோம். குற்றங்கள் பெரிதும் குறைந்திருக்கின்றன. பல சிறைகள் மூடப்பட்டு விட்டன.

—ஆலிவர் (மாகாண முதன் மந்திரி).

கான்ஸாஸ் மாகாணத்தில் மதுவிலக்கு சென்ற முப்பத்தெட்டு வருஷகாலமாய் நடந்து வருகிறது. கள்ளுக்கடை திரும்ப வேண்டுமென்று சொல்வார் இல்லை. மற்றச் சட்டங்களைவிட மதுவிலக்குச் சட்டத்தை மீறுதல் அதிகம் கிடையாது. தொழிற்சாலைக்காரர்களும், பாங்கி முதலாளிகளும் மதுவிலக்கு மிக்க நன்மை தந்திருக்கிறதென்று ஒருமுகமாய் ஒப்புக் கொள்கிறார்கள். எல்லா நீதிமன்றங்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர் சங்கங்களும், வைத்தியர்களும், பத்திரிகைகளும், ஜனங்களில் 100க்கு 95 பேரும் மதுவிலக்கைப் பூரணமாய் ஆதரிக்கிறார்கள். சட்டசபையில் தேசீய மதுவிலக்குச் சட்டம் ஒரு முகமாய் உறுதி செய்யப்பட்டது.

ஹென்ரி ஆலன் (கவர்னர்)

ஜே. எச். கிராபோர்டு (லேபர் கமிஷனர்)

வால்டர் வில்ஸன் (பாங்கி கமிஷனர்)

ஜே. சி. மோலர் (விவசாய போர்டு காரியதரிசி)

ரிச்சர்ட் ஹாப்கின்ஸ் (அட்டர்னீ ஜெனரல் அதாவது சர்க்கார் வக்கீல்)

ஜான்ஸ்டன் (தலைமை நீதிபதி)

கிரம்பின் (சுகாதார அதிகாரி)

சாஸ் ஸெஷ்ஷன்ஸ் (ஒரு முக்கிய பத்திரிகாசிரியர்)

* * * *

விஸ்கான்ஸின் மாகாணத்தில் மதுவிலக்குச் சட்டம் பூரணமாய் அமுலுக்கு வந்திருக்கிறது. அதனால் வியாபாரமும், சன்மார்க்கமும் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. வறுமை குறைந்து வருகிறது.

ஹென்ரி ருடாவ் (சர்க்கார் வக்கீல்)

ஜார்ஜ் கூக் (போலீஸ் தலைவர்)

அல்காட் ஆண்டர்ஸன் (ஸெனேடர்)

* * * *

கெண்டக்கியில் மதுவிலக்கினால் நேர்ந்திருக்கும் நன்மையை அளவிட்டுச் சொல்ல முடியாது. எல்லாவகைக் குற்றங்களும் குறைந்த பட்சம் 100க்கு 50 வீதம் குறைந்திருக்கின்றன. குடிவெறி யென்பது அநேகமாக ஒழிந்து விட்டது.

—ஹென்ரி பார்க்கர்

(கெண்டக்கி அப்பீல் கோர்ட்டின் நீதிபதி)

சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலுகாவில் சிங்காரப்பேட்டை கிராம முனிசீபு பெருமாள் நாயுடு என்பவர் செய்த மதுவிலக்குப் பிரசாரத்தால் தன்னுடைய கள்ளுக்கடையில் வியாபாரம் குறைந்து நஷ்டமுண்டாயிற்றென்றும், அந்த நஷ்டத்திற்கு ஈடாக ரூ 300 தனக்குத் தீர்ப்புச் செய்யவேண்டுமென்றும் அவ்வூர்க் கள்ளுக்கடைக்காரன் தருமபுரி முனிசீபு கோர்ட்டில் பெருமாள் நாயுடு பேரில் ஒரு தாவா செய்தான். அந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டுச் சென்ற ஜூன் மீ 17௳ தள்ளிவிடப் பட்டது. கள்ளுக்கடைக்காரன் தரப்பில் சிலர் சாட்சி சொன்னார்கள். அவர்களில் ஒருவன் தன்னைப்பற்றிச் சொன்ன கதையே நல்ல மதுவிலக்குப் பிரசாரமா யிருந்தது.

"உனக்குக் குடியிருக்கச் சொந்த வீடு உண்டா ?" "இல்லை." "முந்தி இருந்ததா ?" "இருந்தது." "அது என்ன வாயிற்று?" "விற்று விட்டேன்." "ஏன் விற்றாய்?" "கடன் தீர்க்க." "கடன் எப்படி யுண்டாயிற்று ?" "செலவு செய்வதற்காக." "என்ன செலவு, கள்ளுக்குடித்த செலவா ?" "ஆம்." "யாருக்கு வீட்டை விற்றாய் ?" "கள்ளுக்கடைக்காரனுடைய ஆள் ஒருவனுக்கு விற்றேன்."

குடிகாரர்களுடைய கதை எல்லாம் இப்படித்தான். ஆரம்பத்தில் எவனும் மிதமாய்த்தான் குடிப்பான். முடிவில் சுகம், சொத்து, தருமம் அனைத்தையும் இழந்து, கள்ளுக்கடைக்காரன் செய்யும் அநீதி வழக்குகளில் சாட்சி சொல்லவும் நேரிடும்.

* * * *

இங்கிலாந்தில் அரசு புரிந்த மந்திரிகளில் உலகப் பிரசித்தி பெற்றவர் மிஸ்டர் கிளாட்ஸ்டன். அவர் மது விலக்கில் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார். ஒரு சமயம் இங்கிலாந்தின் மது வியாபாரிகள் அவரைப் பேட்டி காண்பதற்குச் சென்றார்கள். மது வியாபாரம் நின்று விட்டால் சர்க்காருக்கு ஒரு பெரிய வருமானத் துறை இல்லாமற் போய்விடுமே என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுது மிஸ்டர் கிளாட்ஸ்டன் பதிலளித்ததாவது :—"கனவான்களே ! சர்க்கார் வருமானத்தைப் பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். குடி ஒழியும்போது ஜனங்கள் சம்பாத்தியங்களை வீணில் தொலைக்காமல் நிதான புத்தியுடன் வாழ்வார்கள். அப்பொழுது அரசாங்கத்துக்கு வருமானம் சேர்க்கும் வழியை நான் அறிவேன்" என்றார்.

மிஸ்டர் கிளாட்ஸ்டன் கூறியது எந்த நாட்டுக்கும் எந்தக் காலத்துக்கும் பொருந்தும். அமெரிக்காவில் மது விலக்குச் சட்டம் ஏற்பட்டபடியினால் அங்கே அரசாங்கத்தார் வருமானம் பே

தாமல் திண்டாடவில்லை. பொருளாதார தத்துவமறிந்த மந்திரிகள் குடியை யொழிப்பதற்கு "அரசாங்க வருவாய் குறைந்து விடுமே" என்று சாக்குச் சொல்லமாட்டார்கள்.

* * * *

"லீக் ஆப் நேஷன்ஸ்" என்னும் சர்வதேச சங்கத்தின் பல கிளைச் சபைகளில் குழந்தைகளின் க்ஷேமத்தைக் குறித்த ஒரு கிளைச் சபையும் உண்டு. இச்சபையாரின் முன்பு டாக்டர் ராபர்ட் ஹொர்க்காட் என்பவர் சமீபத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். இவ்வறிக்கையில் அவர் 1900-ம் வருஷத்தில் டாக்டர் ஏ. ரோடியர் என்னும் பிரஞ்சுக்காரர் நடத்திய ஆராய்ச்சியின் முடிவை எடுத்துக்காட்டி யுள்ளார். குழந்தைப் பிராயத்திலே குற்றம் செய்யத் தொடங்குவோரில் மிகப் பெரும்பான்மையோர் குடிகாரர்களின் குழந்தைகளே என்பது அவருடைய முடிவாகும். "இவர்கள் பிறக்கும்போதே சமுதாயத்துடன் போர் தொடங்குவதற்கு வேண்டிய முஸ்தீப்புகளுடன் பிறக்கிறார்கள்" என்று டாக்டர் ரோடியர் சொல்கிறார். 15, 16 வயதிலேயே கொலைக் குற்றம் செய்ய முயன்ற பல சிறுவர்களின் உதாரணங்களை அவர் எடுத்துக் காட்டுகிறார். அவருடைய ஆராய்ச்சியில் இச்சிறுவர்கள் குடி வெறியர்களின் மக்களென்றும், அவ்வளவு இளம்பிராயத்திலேயே அவர்களும் குடிக்கத் தொடங்கி யிருந்தார்களென்றும் தெரிய வந்ததாம்.

---



கள்ளுப் பாம்பு

# மது விலக்குப் போர்

## காங்கிரஸ் மகா சபையின் திட்டம்

1. மதுவிலக்குத் தொண்டர், தமது தாலூகாவிலுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் மதுவிலக்குச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். மதுபானத்தை ஒழிப்பதிலும், பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதிலும் அநுதாபங் கொண்டவர்கள் அனைவரும் மேற்படி சங்கங்களில் அங்கத்தினராகச் சேரலாம். இவர்கள் காங்கிரஸ் அங்கத்தினராக இருக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. கதரணியாதவர்களாகவு மிருக்கலாம். இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள் தங்கள் தங்கள் நிலைமையை யனுசரித்துச் சந்தா விகிதம் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஷை சந்தா அந்தந்த சபையின் செலவுக்கே உபயோகிக்கப்பட வேண்டியது. சந்தாவே இல்லாமலு மிருக்கலாம்.

2. மேற்கூறிய மதுவிலக்குச் சங்கம் ஒவ்வொன்றின் கீழும் தொண்டர் படை ஒன்று அமைக்க முயலவேண்டும். மதுவிலக்குப் போராட்டத்தில் ஊக்கத்துடன் உழைப்பதற்கு முன் வரும் ஸ்திரீ புருஷர்களை இத்தொண்டர் படையில் சேர்க்கலாம். இவர்கள் சாத்வீகமான முறைகளையே பின்பற்ற வேண்டும். கலகம், பலாத்காரம் இவைகளைக் கைக்கொள்ளக்கூடாது. அவ்வப்போது தாலூகா மதுவிலக்குக் காரியதரிசியிட மிருந்தும், தலைமைக் காரியாலயத்திலிருந்தும் வரும் கட்டளைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு மாதத்திலும் மதுவிலக்கு நாளாகிய இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று மதுவிலக்குப்போரை ஆதரித்துத் தகுந்த கொடிகளுடனும், பாட்டுகளுடனும், ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்திவைக்க வேண்டும். அக்கூட்டங்களில் மதுபானத்தினால் விளையும் கேட்டைப்பற்றியும், மது விலக்குச் சட்டத்தின் அவசியத்தைப்பற்றியும் கள்ளு, சாராயக்கடைகளை மூடிவிட வேண்டுமென்றும் எடுத்துப்பேசிக் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

4. மதுவிலக்குச் சங்கங்களும், மதுவிலக்குத் தொண்டர்களும் மேற்கூடியபடி மாதக்கூட்டங்களை நடத்துவதோடு, தங்கள்

தங்கள் பிரதேசத்தில் இன்னும் கூடுமான வரையில் பல பொதுக் கூட்டங்கள் நடத்தவேண்டும். மற்றும் கிராமங் கிராமமாகவும், வீடு வீடாகவும் சென்று குடிப்பழக்கத்தை ஒழிக்கவும், கள், சாராயக்கடைகளைத் தொலைக்கும் கிளர்ச்சியைப் பலப்படுத்தவும் தீவிர முயற்சி எடுக்கவேண்டும்.

5. மதுவிலக்குச் சங்கங்களும், காங்கிரஸ் கமிட்டிகளும் சௌகரியமான இடங்களிலெல்லாம் ஜனங்களை மதுபானத்திலிருந்து விடுவிப்பதற்காக பஜனை, ஆட்டம், பாட்டு, கூத்து முதலிய நல்ல துறைகளில் அவர்கள் கவனம் செல்லுமாறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முயலவேண்டும்.

6. கூட்டங்களில் கூடிய ஜனங்களிடமிருந்து கள், சாராயம் முதலிய லாகிரிப் பொருள்களைத் தொடுவதில்லையென்று சத்தியப் பிரமாணம் வாங்கவேண்டும்.

7. ஜாதிப் பெரியதனக்காரர்கள் முதலியவர்களுடன் கலந்து கள்ளைத் தீண்டாமலிருப்பதற்குக் கட்டுமானங்கள் ஏற்பாடு செய்ய முயலவேண்டும்.

8. கள்ளுக்கடை மறியல் செய்வதால் பயனுண்டாகும் என்று தோன்றும் இடங்களில் தலைமைக் காரியாலயத்தின் அநுமதி பெற்று, மதுவிலக்குச் சபைகள் தங்கள் தொண்டர்களைக் கொண்டு சாத்வீக முறையில் மறியல் நடத்தச் செய்யலாம்.

9. மிராசுதார்களும், குத்தகைக்காரர்களும் கள்ளுக்கு மரம் விடாதிருக்குமாறு மதுவிலக்குச் சபைகள் முயற்சி செய்ய வேண்டும்.

10. கள்ளு, சாராயம், அபினி முதலியவை விற்கும் கடைகளை யோக்கியர்கள் எவரும் ஏலத்தில் எடுக்காவண்ணம் பிரசாரம் செய்யவேண்டும்.

11. கடைகள் தொலைந்து பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்படுத்துவதே மதுபானத்தை ஒழிக்க வழியாதலால் அதற்குத் தீவிர கிளர்ச்சி செய்யவேண்டும். பூரண மதுவிலக்கை ஆதரிக்கும் ஜனங்களிடம் மதுவிலக்கு உறுதிமொழிப் புத்தகங்களில் கையொப்பம் வாங்கவேண்டும். உறுதிமொழி வருமாறு :—

“ நம் நாட்டில் தருமமும் பொருளும், இன்பமும் வளர்ந்து, அனைவரும் க்ஷேமமாயும் சுகமாயும் வாழ, கள்ளு, சாராயம், அபினி கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை முற்றிலும் ஒழிக்கும் சட்டங்களை உடனே செய்வது அவசியமென்றும், அவ்வித சட்டங்

களைச் செய்வதற்கு நான் ஆதரவாயிருப்பேனென்றும், இந்தியா சட்டசபை, சென்னை சட்டசபை, கிராம, நகர, தாலுகா ஜில்லாச் சபை இந்தத் தேர்தல்களில் பூரண மதுவிலக்குக்கு ஆதரவாக உறுதிமொழிக் கையெழுத்திடாத எவருக்கும் நான் வாக்குக் கொடுப்பதில்லை யென்றும் உறுதி கூறுகிறேன்."

கையொப்பம் இடுவோரின் பெயரும், விலாசமும் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். உறுதிமொழிப் பத்திரங்கள் அடங்கிய புத்தகங்கள் வேண்டுவோர் தலைமைக்காரியாலயத்திற்கு எழுதினால் அனுப்பி வைக்கப்படும்.

இப்புத்தகங்களில் ஆண்மக்கள் பெண்மக்கள் இருபாலாரும், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லாரும் கையெழுத்திடலாம். வாக்காளர் மட்டுமல்ல, மற்றவர்களும் கையெழுத்திடலாம். கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள் கீறல் போட்டுப் பெயர்கள் எழுதுவிக்கலாம்.

மதுபானத்தினின்று நாட்டை விடுவிப்பதே இந்தக் கிளர்ச்சியின் நோக்கம். ஆகையால் விவரத்தை எடுத்துச் சொல்லி ஆண் பெண் இருபாலாரிடமும் கையெழுத்து அல்லது கை நாட்டு வாங்கவேண்டும்.

12. மாகாண சட்ட சபைகளுக்கும், இந்திய சட்டசபைக்கும் நடக்கும் தேர்தல்களில், பூரண மதுவிலக்குக்காக முயற்சி செய்வேன் என்று ஒவ்வொரு அபேக்ஷகரிடமும் வாக்குறுதி கேட்கவேண்டும்.

13. ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்றாவது, அதற்கு முன்பாவது தாலூகா தொண்டர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு மாதாந்த வேலை அறிக்கைகள் அனுப்ப வேண்டும்.

14. எந்த ஜில்லாவிலேனும் அதிக வேலை நடந்து அங்கே ஜில்லா மதுவிலக்குக் காரியதரிசி ஒருவரை நியமித்தல் அவசியமென்று கருதப்பட்டால் அவ்வாறே செய்யப்படும்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி,

காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

---




மேலே வரைந்துள்ள சக்கரம் கலால் வருமானம் வருஷா வருஷம் அதிகமாகிக் கொண்டுவருவதைக் காட்டுகிறது. வருஷங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. பக்கத்தில் கலால் வருமானம் இத்தனை கோடி ரூபாய் என்று படிப்படியாகக் கண்டிருக்கின்றது. 1900-ம் ஹுத்தில் கலால் வருமானம் 6 கோடி ரூபாய்க்குக் குறைவாயிருந்தது. வரவர உயர்ந்து 1920-ம் வருஷத்தில் 20 கோடிக்கு மேல் ஏறிற்று. ஒத்துழையாமை இயக்கத்தினல் 1922-ம் வருஷத்தில் இந்த வருமானம் 19 கோடிக்குக் குறைவாயிற்று. ஆனல் மறுபடியும் 1928-ம் வருஷத்தில் 23 கேரடிக்குமேல் ஏறிவிட்டது. சர்க்கார் அடையும் கலால் வருமானம் ஜனங்கள் கள்ளும் சாராயமும் குடித்து நாசம் செய்யும் பொரு

ளில் ஒருபாகமே. கலால் வருமானம் அதிகரித்ததைக் காட்டும் படத்தி லிருந்து நாட்டின் செல்வம் மதுபானத்துக்காகப் பாழாவதின் அளவைத் தெரிந்து கொள்ளலாம்.

கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் பயனில்லை. ஒரு ஊரில் இருக்கும் 10 கடையை 8 கடை ஆக்கினால் எடுபட்டுப்போன கடைகளின் வியாபாரமும் இருக்கும் கடைகளுக்குப் போய்ச் சேரும். அவ்வளவேயொழியக் குடிப்பது குறையாது. கடைகளைக் குறைத்து வரு கிறோம் என்று சர்க்கார் சமாதானம் சொல்லுவது உதவாத பேச்சு. அடியோடு எல்லாக் கடைகளையும் எடுத்துவிட்டாலொழிய ஏழைகளுக்கு விமோசனமில்லை.

---

# சங்கம் ஏற்படுத்துங்கள்

இந்தியாவில் இருபெரும் சங்கங்கள் மதுவிலக்கு வேலைசெய்து வருகின்றன. ஒன்று காங்கிரஸூம் அதன் கிளை ஸ்தாபனங்களும். காங் கிரஸின் ஆதரவின் கீழ் மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் முறையைப் பற்றி வேறொரு பக்கத்தில் காண்க. காங்கிரஸின் சம்பந்தமில்லாமலும் மதுவிலக்குச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, "இந்திய மதுவிலக்குச் சங் க"த்தில் சேர்ந்து வேலைசெய்யலாம். காங்கிரஸ் மதுவிலக்குப் போருக் கும் இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கும் இவ்வருஷத்தில் ஸ்ரீமான் சக் கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரே காரியதரிசியாக நியமிக்கப்பட் டிருக்கிறார். ஆகையால் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸில் சேராமல் மதுவிலக்கு வேலைசெய்ய விரும்புவோர்களும் ஒத்துழைத்துப் போரை நடத்தல் எளிதாகும்.

அகில இந்தியக் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை அனுசரித்துத் தமிழ் நாட்டில் மதுவிலக்கு வேலை செய்வதற்காக ஸ்ரீமான் எம். பக்தவத் ஸலம் (13, சந்நிதித்தெரு, மயிலாப்பூர்), ஸ்ரீமான் கே. சந்தானம் (காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு) இவ்விருவர்களும் காரியதரிசிகளாக நியமிக் கப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலும், செங்கற்பட்டு ஜில்லாவிலும் மதுவிலக்குப்பிரசாரவேலையை ஸ்ரீமான் பக்தவத்ஸலம் பார்த்துக்கொள்வ தென்றும், மற்ற ஜில்லாக்களில் மதுவிலக்கு வேலையை ஸ்ரீமான் சந்தா னம் பார்த்துக்கொள்வதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆங்காங்குத் தொண்டர்கள் முன்வந்து இந்த முக்கியமான பிரசாரத்தைச் செவ்வனே நடத்துவார்களென்று நம்புகிறோம். ஒவ்வொரு ஊரிலும் காங்கிரஸ் மது விலக்குச் சங்கங்களைக் கூட்டிப் பெருங்கிளர்ச்சி எழுப்பவேண்டும்.

காங்கிரஸில் சேராமலும் இராஜீய விஷயங்களில் சம்பந்தப் படா மலும் மதுவிலக்கு வேலையைமட்டும் செய்ய விரும்புகிறவர்கள் "இந்திய மதுவிலக்குச் சங்க"த்தில் சேரலாம். வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து சந்தா செலுத்திப் பூரண மதுவிலக்குக் கொள்கையை ஒப்புக்கொண்டு "இந்திய மதுவிலக்குச் சங்க"த்தின் கிளைச்சங்கமாகப் பதிவுசெய்து கொள்ளலாம்.

மற்ற விவரங்கள் ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி யாருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.